கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(07.06.2020 - 07 ஆனி, 2020 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 233, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2020



சித்திரை மாதம் 10ம் திகதி விண்ணகம் எய்திய கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் 7வது ஆயராக 25 வருடங்களாக உன்னத சேவை ஆற்றிய ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகையைப் பற்றிய ஆக்கங்கள் உள்ளே

ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

திவ்விய நற்கருணை வழங்குதல் தொடர்பாக கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் வெளியிட்ட சிறப்பு அறிவித்தல்.



# “எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்”

[லூக்கா 22 :19 ]

08 »

# குருத்துவ வாழ்வு, லௌகீக உலகில் சஞ்சரிப்பதற்கல்ல!, மாறாக மக்களுக்காக எமது வாழ்க்கையை அர்ப்பணிக்கவே அழைக்கப்படுகிறோம்!



கொழும்பு உயர்மறைமாவட்ட அருட்சகோதரர்களுக்கு தியாகோன் பட்டம் வழங்கும் திருப்பலி அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில், நீர்கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி ஆலயத்தில் நடைபெற்றது.


எம்மை இறைவன், குருத்துவ வாழ்வு, திருவருட்சாதனத்தின் வழியாக அழைத்திருப்பது; தேவாலயங்களில் லூர்து குகை, மறைபாடசாலை கட்டிடங்கள் போன்ற லௌகீக செயல்களைச் செய்வதற்காக அல்ல, எமது மக்களுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்து ஆன்மீக நிறைவைப் பெற, நாம் கிறிஸ்துவிற்குள் வாழ்ந்து, இறைவனின் குரலுக்கு செவிசாய்த்து, அவரின் விருப்பத்தை...

தொடர்ச்சி 02ம் பக்கம்..

## விண்ணகம் எய்திய அருட்பணியாளர்கள்



அருட்பணி. ரவீன் பெரேரா அடிகளார், பதுளை மறைமாவட்டம்



அருட்பணி. மார்சல் ராஜநாயகம் அடிகளார், பதுளை மறைமாவட்டம்



அருட்பணி. ஹரல்ட் பர்னாந்து அடிகளார், சிலாப மறைமாவட்டம்



அருட்பணி. ஷிரான் கருகொடகே அடிகளார், SDB

இவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற ஞான ஒளி பிரார்த்திக்கின்றது



அருட்பணி. ஹிலரி பீரிஸ் அடிகளார், OMI

## 2020. ஏப்ரல் 21ம் திகதி பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் விசேட செய்தி.




என் அருமை இலங்கை வாழ் சகோதர சகோதரிகளே, சென்ற வருடம் பாஸ்கு ஞாயிறு அதாவது 2019 ஏப்ரல் மாதம் 21ம் திகதியில் திட்டமிட்டு நடத்தப்பட்ட கொடூர தற்கொலை தாக்குதலின் பின்னர் இறந்தவர்களுடனும், படுகாயமடைந்தவர்களுடனும், எம்முடனும் இணைந்து எமக்கு ஆறுதல் தந்து பல உதவிகள் புரிந்த உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திட்டமிட்டு நடத்தப்பட்ட படுகொலை, கொடூர சம்பவத்துடன் இன கலவரம் வெடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சதியை உங்களது பொறுமையும், பொறுப்புணர்வும் தடுத்து நிறுத்தியதுடன் வெளிநாட்டு சக்திகள் எம் நாட்டுக்குள் ஊடுருவுவது உங்களால் தடுக்கப்பட்டது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தொடர்ந்து நாம் இணைந்திருந்து தீய சக்திகளின் சதி திட்டங்களை முறியடிப்போம்.

**என்றென்றும் நீர் புகழப் பெறவும், ஏத்திப் போற்றப் பெறவும் தகுதியுள்ளவர். (தானி 1:29)**



# 2019 பாஸ்கு ஞாயிறு தற்கொலை தாக்குதல் நடைபெற்று ஒருவருட நினைவு கூர்தல்

## 2020. ஏப்ரல் 21ம் திகதி பேராயர் அதிமேதகு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் விசேட செய்தி.

எமது நாட்டில் கடந்த 7 தசாப்தங்களாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில், பல பிரிவினைகளுக்கு இடமளித்து, இனமாக, மதமாக முன்னேறிச் செல்லமுடியாமல் தேங்கி நின்றோம். நாம் எமது தாய் நாட்டை அன்பு செய்வோமானால், குறுகிய எண்ணங்களிலிருந்து விடுபட்டு இணைந்து முன்னேறலாம்.

இத்தாக்குதல்கள் நடந்து ஒரு வருடத்தை தொட்டநிலையிலும், கொடூர தாக்குதலை நடத்தியவர்கள் யார்?, இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் யார்?, இத்தாக்குதலுக்கு நிதியுதவி அளித்து சதி திட்டம் தீட்டியவர்கள் யார்? என்பவற்றை தீர விசாரணை நடத்தி உயரதிகாரி, செல்வந்தர், பட்டதாரி என தராதரம் பாராது யாராக இருந்தாலும் அவர்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழுவினூடாக சிறிதளவு நீதி கிடைத்திருப்பினும் தொடர்ந்து விசாரணை நடத்தி, முழுமையான தீர்வை பெற்றுத் தர ஜனாதிபதியின் நேரடி தலையீட்டுடன் செயல்படுமாறு வேண்டுகோள் விடுப்பதுடன் மீண்டுமொருமுறை இவ்வாறாக கொடூர தாக்குதல் இடம்பெறாமல் தடுக்க வேண்டும் என்பதே எமது ஆதங்கமாகும்.

அதேபோல் தாக்குதல் நடத்தப்பட்ட காலங்களில் எமது ஆராத வேதனையுடன் இணைந்து கொள்ள முன்வந்த பௌத்த தேரர்கள், இஸ்லாம் மத மௌலவிகளுக்கும், தமது விகாரைகளிலும், தொழுகை கூடங்களிலும் எமது கத்தோலிக்க மதத்தினருக்காக வழிபாடுகளை நடத்த முன்வந்தமைக்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இலவசமாக உணர்வுபூர்வமாக சேவையாற்றிய எமது அரச, தனியார் வைத்தியசாலையின் வைத்தியர் ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் காவல்துறையினருக்கும், சுகாதார அமைச்சை சார்ந்த குழுவினருக்கும், நிதி துறைக்கும், அத்துடன் விசேடமாக எமது திருதந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கான் நகர் கொரோனா வைரசின் தாக்கத்தினால் சோகத்தில் மூழ்கியிருந்த சந்தர்ப்பத்தில் எம்மை நினைவு கூர்ந்து எமக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தை நினைவு கூர்ந்தமைக்காகவும் இத்தருணத்தில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோர சம்பவத்திற்கு உள்ளான எம் உறவுகளுடன் இரவு பகல் பாராது ஆறுதலளித்து அவர்களை படுகுழியிலிருந்து தூக்கியெடுக்க கைகொடுத்து உதவிய எமது அருட்தந்தையர், துறவிகள், கன்னியர்கள் மேலும் பொதுநிலையினர் அனைவருக்கும் எமது நன்றிகளை



தெரிவித்துக்கொள்கிறேன். மதம், இனம் பாராது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பலவழிகளில் உதவியும், நிதியுதவி புரிந்த அனைத்து நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும், எமது நன்றிகள். (நிதியுதவி தொகை மில்லியன் ரூபா ஐநூற்றி பதினாறு ஆகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு மில்லியன் ரூபா முன்நூற்றி எழுபத்தியிரண்டு செலவிடப்பட்டுள்ளது. மிகுதியாக உள்ளது மில்லியன் நூற்றி நாட்பத்தியாறு. இதைப்பற்றிய மேலதிக விரங்களை பொரளை ஆயர் இல்லத்தின் 'செத் சரண' நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்).

கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயம், கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றுக்கான நிர்மாண பணிகளுக்கு உதவி புரிந்த வீட்டு அதிகார சபைக்கும் அரச நிறுவனங்களுக்கும், தற்போதைய எதிர்கட்சி தலைவர் ஆகியோருக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கிறேன்.

நடைபெற்ற அசாதாரண நிகழ்வின் மூலம் நாம் முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொண்டோம். அதாவது, ஏதேனும் ஆபத்துக்கள் விபரீதங்கள் ஏற்படும் பட்சத்தில் பிரிவினை வாதத்தினை தூண்டாமல், இனம் மதம், மொழி பாராது இணைந்திருந்து செயல்பட வேண்டும் என்பதேயாகும்.

இந்நாடு பௌத்த சித்தாந்தத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதை நாம் ஏற்ற, இந்து, முஸ்லிம், கிறிஸ்தம் என அனைவரும் இணைந்து சகோதரத்தன்மையுடன் இந்நாட்டை முன்னேற்ற பாதையில் இட்டு, 30 வருட யுத்தத்தைப் போன்று மீண்டுமொரு யுத்தத்திற்கு இடமளியாது, புதிய இலங்கையை கட்டியெழுப்ப நாம் கைகோர்த்து முன்னேறுவோம்.

**உங்களனைவருக்கு நன்றி! இயேசு துணை!**

### 01 குருத்துவ வாழ்வு...

நிறைவேற்றி, அவரின் கரத்தில் வல்லமைமிக்க ஆயுதமாக மாறுவதற்கே! கர்தினால் தமதுரையில் தொடர்ந்து கூறியதாவது; இறை சேவையின் உள்ள செயல்பாடு எமது தகுதியினால் அமைந்ததல்ல. எமது திறமைகள், படிப்பறிவு, குடும்ப பொருளாதாரம் போன்றவை இறைவனுக்கு அவசியமற்ற விடயங்களாகும்.

நாம் இவ்வுலகில் பிறக்கும் முதலே எமது பெற்றோரை ஒன்றாக இணைத்து அவர்களின் மூலம் இவ்வழைத்தலுக்கு எம்மை தேர்ந்தெடுத்திருக்கிறார். இந்த விசேட இறைவழிபாட்டுக்கு, தேசிய குருமட அதிபர் அருட்பணி எக்ஸ்செடிடஸ் ஜயகொடி அடிகளார், மறைமாவட்ட இறையழைத்தல் இயக்குனர் அருட்பணி பிரிலி முத்துகுட ஆராச்சி அடிகளார், பங்குபற்றியதுடன், இறை சந்நிதானத்தில் வார்த்தைப்பாடளித்த அருட் சகோதரர்களான சுத் நிர்மல், ருமேன் பெரேரா, மேரியன் டிலக்சின், இம்மானுவேல் டில்சான், நதீஷ ஜயகொடி, லகிறு பிரசான் சந்துன் கோல்ட்சன் ஆகியோராவர். தற்போதைய கொரோனா கொல்லை நோயின் சுகாதார ஆலோசனையின்படி பாதுகாப்பு காரணமாக இவ்வழிப்பாட்டில் தியாககோன் சகோதரர்களின் இருவரின் பெற்றோர் மாத்திரம் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

மேற்குறிப்பிட்ட அருட்சகோதரர்களை குருமடத்திற்கு உட்படுத்திய அருட்பணியாளர்கள், நீர்கொழும்பு வட்டார அருட்பணியாளர்கள், நீர்கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி அதிபர் அருட்பணி கால்டன் சில்வா அவர்கள் இணைந்துக்கொண்டனர். கொழும்பு உயர்மறைமாவட்ட திருவழிப்பாட்டு அமைப்பு இவ்வழிப்பாட்டை ஒழுங்கமைத்திருந்தது.

## 2020. சித்திரை 21ம் திகதி பேராயர் அதிமேதகு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் விசேட செய்தி.

என் அருமை இலங்கை வாழ் சகோதர சகோதரிகளே, சென்ற வருடம் பாஸ்கு ஞாயிறு அதாவது 2019 சித்திரை மாதம் 21ம் திகதியில் திட்டமிட்டு நடத்தப்பட்ட கொடூர தற்கொலை தாக்குதலின் பின்னர் இறந்தவர்களுடனும், படுகாயமடைந்தவர்களுடனும், எம்முடனும் இணைந்து எமக்கு ஆறுதல் தந்து பல உதவிகள் புரிந்த உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திட்டமிட்டு நடத்தப்பட்ட படுகொலை, கொடூர சம்பவத்துடன் இன கலவரம் வெடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சதியை உங்களது பொறுமையும், பொறுப்புணர்வும் தடுத்து நிறுத்தியதுடன் வெளிநாட்டு சக்திகள் எம் நாட்டுக்குள் ஊடுவுவது உங்களால் தடுக்கப்பட்டது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தொடர்ந்து நாம் இணைந்திருந்து தீய சக்திகளின் சதி திட்டங்களை முறியடிப்போம்.

எமது நாட்டில் கடந்த 7 தசாப்தங்களாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில், பல பிரிவினைகளுக்கு இடமளித்து, இனமாக, மதமாக முன்னேறிச் செல்லமுடியாமல் தேங்கி நின்றோம். நாம் எமது தாய் நாட்டை அன்பு செய்வோமானால், குறுகிய எண்ணங்களிலிருந்து விடுபட்டு இணைந்து முன்னேறுவோம். இத்தாக்குதல்கள் நடந்து ஒரு வருடத்தை தொட்டநிலையிலும், கொடூர தாக்குதலை நடத்தியவர்கள் யார்?, இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் யார்?, இத்தாக்குதலுக்கு நிதியுதவி அளித்து சதி திட்டம் தீட்டியவர்கள் யார்? என்பவற்றை தீர விசாரணை நடத்தி உயரதிகாரி, செல்வந்தர், பட்டதாரி என தராதரம் பாராது யாராக இருந்தாலும் அவர்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழுவினூடாக சிறிதளவு நீதி கிடைத்திருப்பினும் தொடர்ந்து விசாரணை நடத்தி, முழுமையான தீர்வை பெற்றுத் தர ஜனாதிபதியின் நேரடி தலையீட்டுடன் செயல்படுமாறு வேண்டுகோள் விடுப்பதுடன் மீண்டுமொருமுறை இவ்வாறாக கொடூர தாக்குதல் இடம்பெறாமல் தடுக்க வேண்டும் என்பதே எமது ஆதங்கமாகும்.

அதேபோல் தாக்குதல் நடத்தப்பட்ட காலங்களில் எமது ஆராத வேதனையுடன் இணைந்து கொள்ள முன்வந்த பௌத்த தேரர்கள், இஸ்லாம் மத மௌலவிகளுக்கும், தமது விகாரைகளிலும், தொழுகை கூடங்களிலும் எமது கத்தோலிக்க மத வழிபாடுகளை நடத்த முன்வந்தமைக்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இலவசமாக உணர்வுபூர்வமாக சேவையாற்றிய எமது அரச, தனியார் வைத்தியசாலையின் வைத்தியர் ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் காவல்துறையினருக்கும், சுகாதார அமைச்சை சார்ந்த குழுவினருக்கும், நிதி துறைக்கும், அத்துடன் விசேடமாக எமது திருதந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கான் நகர் கொரோனா வைரசின் தாக்கத்தினால் சோகத்தில் மூழ்கியிருந்த சந்தர்ப்பத்தில் எம்மை நினைவு கூர்ந்து எமக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தை நினைவு கூர்ந்தமைக்காகவும் இத்தருணத்தில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோர சம்பவத்திற்கு உள்ளான எம் உறவுகளுடன் இரவு பகல் பாராது ஆறுதலளித்து அவர்களை படுகுழியிலிருந்து தூக்கியெடுக்க கைகொடுத்து உதவிய எமது அருட்தந்தையர், துறவிகள், கன்னியர்கள் மேலும் பொதுநிலையினர் அனைவருக்கும் எமது நன்றிகளை...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
07 ஆனி, 2020 ஞாயிற்றுக்கிழமை.

# நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள்.

"வாழ்வு தரும் உணவு நானே, என்னிடம் வருபவருக்குப் பசியே இராது என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது" (யோவா.6:35).

உணவும் தண்ணீரும் நமது உடலின் பசியையும் தாகத்தையும் தணிக்க வல்லது. ஆனால் நமது ஆன்மப் பசியையும் இதயத் தாகத்தையும் தணிக்க வல்லவர் இயேசுகிறிஸ்து ஒருவரே. நிலத்தின் விளைவினாலும் மனித உழைப்பினாலும் தான் அப்பமும் இரசமும் கிடைக்கிறது. இவை தாம் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறி நமது ஆன்ம உணவாகவும் பானமாகவும் அமைகின்றன. அப்ப இரசத்தின் வழியாக இயற்கை முழுவதும் இறைவனுக்குள் காணிக்கையாக்கப்படுகின்றன. அத்துடன் மானிட உழைப்பும் மாண்படைகிறது. அப்பமும் இரசமும் உணவுப் பொருட்கள். உயிர்வாழ உணவு தேவை. எனவே இவ்வுணவுப் பொருட்கள் வழியாக நம் உயிரையே இறைவனுக்கு நன்றியறிதலாக கொடுக்கின்றோம். நாமளிக்கும் அப்பமும் இரசமும் நம்மிலே விலை குறைவுள்ளன. ஆனால் அவை கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுவதால் நிகரற்ற மதிப்பைப் பெறுகின்றன.

இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவைக் கொண்டாடம் இன்றைய காலகட்டத்தில் நற்கருணை உட்கொள்ள முடியாமல் ஏங்கிக் கொண்டிருக்கும் கத்தோலிக்கர்களின் தாகம் தணிக்கும் முகமாக பேராயர் திவ்விய நற்கருணை வழங்கல் தொடர்பாக சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். அவற்றை வாசித்து அதன்படி செயற்பட அழைக்கின்றோம். அத்தோடு உலகையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கொரோனா வைரசிலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். வீட்டிலே பாதுகாப்பாக இருங்கள். உங்கள் அயலவர்களையும் பாதுகாப்புடன் செயல்படும்படி கூறுங்கள். வீட்டில் இருந்து செபமாலை செபித்து இவ்வைரஸ் நோய் எம்மைவிட்டு நீங்கும்படி பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். திருப்பலிகள் தொலைக்காட்சிகளில் நேரலையாக காண்பிக்கப்படுகின்றன. அவற்றில் பக்தியுடன் கலந்து கொள்ளுங்கள்.

இம்மாதம் பரிசுத்த திருச்சபையானது மூவொரு இறைவன் பெருவிழாவை கொண்டாடி மகிழ்கின்றது. மூவொரு இறைவன் பெருவிழா. "நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்". (மத்.28:19) திருமுழுக்கு எனும் அருளடையாளம் தண்ணீருக்குள் மட்டுமல்ல மாறாக நம்மை தமதிருத்துவத்திற்குள் மூழ்கடிக்கிறது. நாம் மூவொரு இறைவனுக்குள்ளும் மூவொரு இறைவன் நமக்குள்ளும் உறைகிறோம். எனவே கிறிஸ்தவ வாழ்வு என்பது மூவொரு இறைவனுக்குள் சங்கமிப்பதாகும். மூவொரு இறைவனின் வாழ்வென்பது தந்தை மகன் தூய ஆவியின் அன்பு உறவாகும். மூவொரு இறைவன் பற்றிய வெளிப்பாடு வெறும் கோட்பாடு அல்ல. மாறாக அது அன்புறவில் எழும் தெய்வீக வாழ்க்கை முறையாகும். மூவொரு இறைவன் மூன்று ஆட்களாக இருந்தாலும் ஒரே இறைத்தன்மையை கொண்டவர்கள். தனித்துவத்தை மதித்துச் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பதே மூவொரு இறைவன் பெருவிழா கூறும் செய்தியாகும். மேலும் இம்மாதம் புனித அந்தோனியார் திருவிழாவையும் நாம் நினைவுகூருகின்றோம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

ஆக்கம் :
அருட்சகோ. R. ஜோசப் ஜெயகாந்தன்

## கொரோனா தொற்றுநோய் இறைவனின் அழகிய உலகத்தை விட்டு அகன்று போக

# மரியன்னையின் விசேட பரிந்து பேசுதலுக்கான வழிபாடுகள்.



இன்று உலகத்தை முடங்கச் செய்து, மனித குலத்தை நிலைகுலையச் செய்து, தொட்ட இடமெல்லாம் நோய் பிடிக்கும் என்ற பீதியை ஏற்படுத்தி, பல ஆயிரம் உயிர்களை ஏற்கனவே காவு கொண்டு, பல இலட்சக்கணக்கான மக்களை அந்த வரிசையிலே நிறுத்தி வைத்து, அடுத்த நிமிடம் யாருக்கு என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு நிலைக்கு எம் எல்லோரையும் தள்ளி வைத்திருப்பது, இந்த உலகத்திலே வாழுகின்ற 700 கோடி மக்களினுடைய சாதாரண கண்களுக்கு தெரியாத ஒரு சிறிய கிருமி, அதுதான் கொரோனா வைரஸ், இது எங்கிருந்து வந்தது? ஏன் வந்தது? எப்படி வந்தது? யாரால் வந்தது என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் தேட முற்படுமுன்பே 75, 000 மேற்பட்ட உயிர்களை அது பறித்துவிட்டது. இப்போது எமக்குத் தேவை கேள்விகளுக்குப் பதில் அல்ல மாறாக இறப்புகளுக்கு முடிவு, நோய்களுக்கு விடிவு, எம் எல்லோருக்கும் வேண்டும் ஒரு புதிய வாழ்வு.

ஆம் எம் எல்லோரையும் இந்நோயில் இருந்து காப்பாற்றும் படி மரியன்னையிடம் எமது திருத்தந்தை பிரான்சிஸ்சும், கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையும் சிறப்பு வழிபாடுகளை நடாத்தினர். அவை பற்றி பின்வருமாறு பார்ப்போம்.

### மடுத் திருத்தலத்தில்

தவக்காலத்தின் புனித வாரத்தில் மடு அன்னையின் பரிந்துரையை வேண்டி சித்திரை மாதம் 07ந் திகதி காலை 11.00 மணிக்கு மடுத்திருத்தலத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் விசேட சிறப்பு வழிபாடு இடம்பெற்றது. இது காலத்தின் கட்டாயத் தேவை.

கடந்த 500 வருடங்களாக தன்னைத் தேடி வந்தவர்களை அரவணைத்த மருதமடு தாய் தனது பரிந்துரையால் ஆயிரக்கணக்கான மக்களைக் காப்பாற்றிய தாய், இன்று என்ன செய்வோம்? எங்கு செல்வோம் என்ற பதட்டத்தில் வாழும் இலங்கை வாழ் மக்களின் அழுகுரலைக் கேட்டு அவர்களுக்காக பரிந்துரைத்து மன்றாடும்படி இறைமக்களை அன்னைக்கு ஒப்புக்கொடுத்து இச்சிறப்பு வழிபாடு நடாத்தப்பட்டது.

### தேவத்தை பசிலிக்காவில்

கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு...

15

# உண்மை உறைக்கும்




நன்றி. இணையத்தளம்

# கிறிஸ்தவ தமதிரித்துவ நம்பிக்கை

அருட் பணி ஜெராட் டீ ரோசய்ரோ
அ.ம.தி.



### இறை வெளிப்பாட்டு அடிப்படையில் ஓர் விளக்கம்

கிறிஸ்தவ வாழ்வில் அடித்தளமாக இருப்பது தமதிரித்துவ இறை நம்பிக்கையாகும். தம்மிலே முழுநிறைவும், பேரருளும் கொண்ட கடவுள், தம் அருள் வாழ்வில் பங்கேற்பதற்காக மானிடரை சுதந்திரமுள்ளவராகப் படைத்தார். மானிடர் தம் சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தியதால், கடவுள் வழங்கிய அருள் நிலையை இழந்தார்கள். அந்நிலையிலிருந்து அவர்களை மீட்க தமது மீட்புத்திட்டத்தில் பல வழிகளில், பலர் வழியாகப் பேசிய இறைவன், இறுதி நாளில் தம் மகன், இயேசு கிறிஸ்து வழியாகப் பேசினார். தமது ஆவியின் செயல் பாடுகள் வழியாக தொடர்ந்து அவர்களை நிறைவாழ்வை அடைவதற்கு வழிநடத்துகிறார். இதனை இறைவனே தமது நன்மைத்தனத்திலும், ஞானத்திலும் மானிடருக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை கிறிஸ்தவ திருவிவிலியம் உறுதியுடன் கற்பிக்கின்றது. கிறிஸ்தவர்களால் ஏற்கப்பட்ட தமதிரித்துவ இறை நம்பிக்கையை கிறிஸ்தவ திருவிவிலிய ஆதாரங்களின் அடிப்படையில் நோக்குவது இக்கட்டுரையின் இலக்காகும்.

### கிறிஸ்தவ திருவிவிவிலியம்

தம் வாழ்வில் நிறை உண்மையையும், மகிழ்ச்சியையும் இடைவிடாது தேடிக்கொண்டிருப்பவர்கள் மானிடர். தம் சுய முயற்சியால் தொடரும் இம்மானிட தேடலில் வரையறைகளைச் சந்திக்கிறார்கள். மானிடர் தம் வாழ்வில் எதிர் கொள்ளும் வரையறைகள், அனைத்தையும் கடந்த பரம்பொருள் உண்டென்ற உணர்வை மானிடரில் வளர்கின்றன. ஆயினும் பகுத்தறிவால் மட்டுமே அப்பரம்பொருளை அறிந்து கொள்வதில் மானிடர்கள் பல தடைகள் இருப்பதை உணர்கின்றனர். இதனால் மானிடர் தம் அறிவுக்கு அப்பாற்பட்ட உண்மைப் பொருளை புரிந்து கொள்வதற்கு ஒளியூட்டப்பட வேண்டிய தேவையில் உள்ளனர். இறை வெளிபாட்டினால் மானிடர் ஒளியூட்டப்படுகின்றனர் என்பது கிறிஸ்தவ நம்பிக்கையாகும். இறைவெளிப்பாட்டை யூதர்களும், கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் ஏற்றுக்கொண்ட நிலையில், கிறிஸ்தவர்கள் இறைவெளிபாடு வழியாக பரம்பொருளான கடவுளை அவரது தமதிரித்துவ தன்மையில் புரிந்து, ஏற்றிருப்பது கிறிஸ்தவர்களின் கடவுள் நம்பிக்கையின் தனித்துவமாகும். கிறிஸ்தவ கடவுள் நம்பிக்கையின் தனித்தன்மைக்கு ஆதாரமாய் இருப்பது கிறிஸ்தவ திருவிவிலியமாகும்.

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இருபகுதிகளைக் கொண்ட திருவிவிலியத்தில், கடவுளின் மீட்பளிக்கும் தந்தை அன்பு, யூத வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்ட வழிகளுக்கான சாட்சியத்தை பழைய ஏற்பாடு பகர்கின்றது. இறை தந்தையின் வெளிப்பாட்டின் இடை நிலையாளரும், தந்தையின் நிறைவான, உறுதியான வெளிபாட்டாளருமான இறைமகன் இயேசுவின் வாழ்விற்கும், படிப்பினைகளுக்கும் புதிய ஏற்பாடு சாட்சியாகும். மேலும், இறை தந்தை, இறை மகனின் வெளிப்பாடுகள் முழுமையை அடைய அனைவரும், அனைத்தும் தூய ஆவியின் பிரசன்னம், செயல்பாடுகள் வழியாக, வழிநடத்தப்படுகின்றன என்பதையும் திருவிவிலியம் கற்பிக்கின்றது. திருவிவிலியத்தின் இவ்விரு பகுதிகளையும் கிறிஸ்தவர்கள் ஏற்பதால் அவர்களின் கடவுள் பற்றிய புரிந்துணர்வும், கடவுள் நம்பிக்கையும் தமதிரித்துவ தன்மை பெறுகின்றது.

### பழைய ஏற்பாட்டில் இறைவன்

கிறிஸ்தவ கடவுள் நம்பிக்கையின் வேர்கள் பழைய ஏற்பாட்டில் உண்டு. இஸ்ராயேல் மக்கள் எகிப்திய அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்ற நிகழ்வில் இறைவனின் வல்ல மீட்புச் செயலை அறிந்தார்கள். அவர்களை அடிமை வாழ்விலிருந்து விடுவித்த கடவுள் வல்லவர், வலிமையுள்ளவர், தெய்வங்களுள் நிகரற்றவர், தம் பேரருளால் அவர்களை வழிநடத்தியவர், அவர்களை உடமையாக்கிக் கொண்டவர், தமக்கென நிலத்தை அளித்தவர், அரசாள்பவர் என்று பலவாறாக அவர்களது கடவுள் நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள் (விப.15: 1-18). தம்மை எகிப்திய துன்பத்திலிருந்து விடுவித்த கடவுள் **இஸ்ராயேல் என் தலைமகன்**; **தலைப்பிள்ளை என்னை வழிபடுமாறு என் மகனைப் போகவிடு!** என்று பார்வோனிடம் சொல்வாய் என மோயிசனுக்கு ஆணையிட்டவர். அவரை தந்தையாகவும் கண்டுணர்ந்தார்கள் (விப. 4:22). **நான் அவனுக்கு தந்தையாக இருப்பேன். அவன் எனக்கு மகனாக இருப்பான். உன் முன்பாக நான் சவுலை விலக்கியதுபோல, என் பேரன்பினின்று அவனை விலக்கமாட்டேன்**, என்று தாவீதுக்கு நாத்தான் கொடுத்த செய்தியில் அன்புமிக்க தந்தையாக கடவுளைக் கண்டார்கள் (2சாமு.7:14-15). இறைவனின் வெற்றிப் பவனியை குறிப்பிடும் திருப்பாடல் 68:5ல் **திக்கற்ற பிள்ளைகளுக்குத் தந்தையாகவும்** இருப்பார் என்பது, அவர்களது இறைவேண்டலில் கடவுளை அப்பாவாக காண்பதை உணர்த்துகிறது.

இவ்வாறு கடவுள் தந்தை என இஸ்ராயேல் மக்களிடம் வளர்ந்துவந்த கடவுள் நம்பிக்கையில் அவரது அன்பு ஒரு தாயின் பராமரிக்கும் அன்பைப் போன்று தேற்றும் தன்மை கொண்டது என்பதை இறைவாக்கினர் எசாயாவின் **தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல், நான் உங்களைத் தேற்றுவேன்** என்ற வார்த்தைகள் உறுதிப்படுத்துகின்றன. **தாய்மடி தவழும் குழந்தையென என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாகவுள்ளது** என்ற திருப்பா அடிகளில் (திபா.131:2) அவர்களின் கடவுள் நம்பிக்கையில் இறைவனின் தாயன்பு வெளிப்படுவதைக் காணலாம். ஆயினும், கடவுள் தந்தை-தாய் அன்பு மானிடப் பெற்றாரின் அன்பைக் கடந்தது, கடவுள் போல் தந்தையாக இருப்பதில் அவருக்கு நிகர் அவர் ஒருவரே என்பது அவர்களது புரிந்துணர்வாகும். இதனை **பால்குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? இவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன்** என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகளில் காணலாம் (எசா.49:15). **என் தந்தையும் தாயும் என்னைக் கைவிட்டாலும் ஆண்டவர் என்னை ஏற்றுக் கொள்வார்** என்ற திருப்பா அடிகள் (திபா.27:10) இறைவனின் தாய்-தந்தை போன்ற தேற்றும் அன்பு மானிட அன்பைக் கடந்தது என்ற அவர்களது நம்பிக்கையை உறுதிசெய்கின்றது.

### புதிய ஏற்பாட்டில் இறைவன்

#### அ] இயேசுவில் தந்தை–மகன் வெளிப்பாடும்

கடவுளை பேரன்புகொண்ட தந்தையாகவும் அறிக்கை யிட்டு வளர்ந்த யூத சமய-சமூக மரபில் பிறந்து வளர்ந் தவர் இயேசு. அவரது திருமுழுக்கு மற்றும் அவரது தோற்றம் மாற்ற நிகழ்வுகளில் இறை தந்தையின் குரலொலி இயேசுவை **இவரே என் அன்பார்ந்த மகன்** என்று வெளிப்படுத்தியது (மாற்.1:11; 9:7). தமது சிறுவயதிலேயே. **என் தந்தையின் அலுவலில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?** (லூக். 2:49) என்ற வாஞ்சையுடன் வளர்ந்த இயேசு, தம் மீட்பளிக்கும் செயல்பாடுகள் யாவும் இறை தந்தையின் விருப்பு நிறைவேறுவதன் வெளிப்பாடுகள் என வெளிப்படையாகப் சொன்னார். **என் தந்தை எல்லாவற்றையும் என்னிம் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார்**; **மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருக்குமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்** என்று இயேசு தந்தைக்கும் தமக்கும் உள்ள தனிப்பட்ட, நிலையான உறவை உறுதியுடன் வெளிப்படுத்தினார் (மத்.11:27). **தந்தையின் ஒரே மகன்** என்னும் நிலையில் அருளும், உண்மையும் நிறைந்து விளங்கியவராக, இறை மாட்சியைப் பெற்றவராக **நம்மிடையே குடிகொண்டார்** என்பதை திருத்தூ தர்கள் கண்டார்கள் (யோவா. 1:14).

தந்தைக்கும் தனக்கும் உள்ள உறவை வார்த்தையால் மட்டுமல்ல, வெளிப்படையாக தம் வாழ்வால் இயேசு உறுதிப்படுத்தினார். இதனை **என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்** என்று பிலிப்பிடம் அவர் தெளிவாகக் கூறியது உணர்த்துகிறது (யோவா. 14:9-10). இயேசு இறை தந்தையின் மகன் என்பதை தமது இறை வேண்டலில் வெளிப்படுத்தினார் (யோவா. 17:1-26). தாம் தெரிந்து கொண்டவர்களையும் இறைவனை **தந்தாய்** என அழைத்து இறை வேண்டல் செய்ய கற்றுக் கொடுத்தார் (மத். 6:5-13). தந்தையால் அன்பு செய்யப்பட்ட அனுபவத்தினால் தம் வாழ்வைக் கையளிக்க திடம் கொண்டார் (யோவா.10:17-18). இறைவனை தந்தை என வெளிப்படையாக அழைத்து, இறை வேண்டல் செய்து, தந்தையிடம் இருந்து கற்றவற்றையே போதிப்பதாகவும் (யோவா:12:49), செய்வதாகவும் பேசியதால், அவரது சமயத் தலைவர்களுடன் மோதலுக்கும், **இறைபழி கூறுகிறான்** என்ற குற்றச் சாட்டுக்கும், கொல்லப்படுவதற்கும் ஆளானார் ( யோவா. 8:31-57). தமக்கு நிகழவிருந்த பாடுகளின் நினைவால் துயருற்றவராய், **சோதனைக்கு உட்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள்** என சீடர்களைக் கேட்டுக் கொண்ட இயேசு, தாமே **தந்தையே உமக்கு விருப்பமானால்** என இறைவனிடம் வேண்டினார் (லூக்.22:39-42). **எல்லாம் நிறைவேற்று** என்று தந்தையின் ஒன்றிப்பில், அவர் விருப்பை நிறைவேற்றியவராக தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார் (யோவா. 19:30).

#### ஆ] இயேசுவில் தூயஆவியார் வெளிப்பாடு

இறைவனின் ஆவியால் தாய் மரியாவிடம் கருவான இயேசு (லூக்.1:30), தமது திருமுழுக்கில் இறை ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றைவிட்டுப் புறப்பட்டார் (லூக். 4:1), அதே ஆவியின் வல்லமையுடன் வல்ல செயல்கள் புரிந்தார். சமாரியப் பெண்ணிடம் **நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்** என இயேசு உறுதி செய்தார் (யோவா.4:14). **ஆவியாரே வாழ்வு தரும் தண்ணீர்**. திருவிழாவின் இறுதிநாளில் இயேசு **யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும்** என உரத்த குரலில் கூறியதை, **தம்மிடம் நம்பிக்கை கொண்டிருப்போர் பெறப்போகும் தூய ஆவியைக் குறித்தே அவர் கூறினார்** என்கிறார் புனித யோவான் (யோவா.7:37-39). இயேசு தம் சீடர்களிடம் **என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார்**; **நான் கூறியது அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்** என உறுதி செய்தார் (யோவா.14:26). இன்னும் துணையாளரான தூய ஆவியார் இயேசுவைப் பற்றி சாட்சிபகர்வார் (யோவா.15:26) உண்மையை வெளிப்படுத்துவார், உண்மையை நோக்கி வழிநடத்துவார், **அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார், இவ்வாறு அவர் என்னை மாட்சிமைப்படுத்துவார்** (யோவா.16:12-15) என்ற இயேசுவின் அறிவிப்பு இறை தமதிரித்துவ நிலையை வெளிப்படுத்துகிறது. உயிர்த்தெழுந்த இயேசு தம் சீடர்கள் மேல் ஊதி, **ஆவியைப் பெற்றுக் கொள்ளுங் கள்** (யோவா.20:21) என்றது தந்தையிடமிருந்தும், மகனிடமிருந்தும் அருளப்பட்ட ஆவியாராவார். தந்தை யுடன் ஒன்றித்து, தந்தையின் ஆற்றலோடு தம் வாழ்வால், படிப்பினைககளால் அருன்செயல்களால் தந்தையின் நிறைவான வெளிப்பாடாகிய இயேசு, தூய ஆவியை தம்மில் நம்பிக்கை கொள்வோருக்கு உறுதி செய்து இறை திரித்துவ வெளிப்பாடாகின்றார்.

#### இ] இயேசுவின் இறையாண்மை வெளிப்பாடு


தமது உயிர்த்தெழுதலில் மரியாவிடம் **நீ என் சகோதரரிடம், என் தந்தையும், உங்கள் தந்தையும், என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்கிறேன்** எனச் சொல் என்று அவரைப் பணித்தார் (யோவா. 20:17). மகதலா மரியா சீடரிடம் சென்று **நான் ஆண்டவரைக் கண்டேன்** என்றார். கிறிஸ்தவ திருவிவிலியத்தில் **ஆண்டவர்** எனும் பெயர் பொதுவாகக் கடவுளின் இறையாண்மையைக் குறிக்கும். இயேசு தமது இறையாண்மையை, **கடவுள் தன்மையை** (பிலி. 2:6) இயற்கை, அலகை, பாவம், சாவு, வாழ்வு ஆகிய வற்றின் மீது கொண்ட ஆற்றலிலும், அனைத்துக்கும் மேலாகத் தமது உயிர்ப்பிலும் வெளிப்படுத்தினார்.

#### உ] ஆரம்ப கிறிஸ்தவர்களின் திரித்துவ இறை நம்பிக்கை

இயேசுவின் உயிர்ப்பின் பின்னர், ஆரம்ப கிறிஸ்தவர்கள் தந்தை, மகன், தூய ஆவியாரின் ஒன்றித்த இறைதன்மையில் கொண்ட நம்பிக்கையை வளர்த்த பாங்கை புதிய ஏற்பாட்டுக் கூற்றுக்கள் எடுத்துக் கூறுகின்றன.

▪▪தொடரும்▪▪





# மறைந்தும் மறையாமல் வாழும் கடவுளின் மனிதர்





இவ்வாண்டு பெரிய வெள்ளியன்று அதாவது சித்திரை மாதம் 10ம் திகதி இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கே ஒரு மனக்கவலைக்குரிய நாளாக இருந்தது. கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைந்து அன்று இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கே பெருமை சேர்த்து தந்த நல்ல ஆயன் தன் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு கிறிஸ்துவுடன் முடிவில்லா வாழ்வில் இணைந்து கொண்டார். 1977ம் ஆண்டு கொழும்பு உயர் மறைமாவட்டத்தை பொறுப்பெடுத்து மூன்று தசாப்த காலமாக கிறிஸ்துவை போல நல்ல ஆயனாக இருந்து எம்மை வழிநடத்தி தனது குருத்துவ வாழ்விலும் 60 ஆண்டு கால நிறைவை கொண்டாடி அனைவரின் உள்ளங்களிலும் நீங்காமல் வாழும் எமது அன்பின் தந்தை பேராயர் நிக்லஸ் மாக்கஸ் ஆண்டகை அவர்களை பற்றியும் அவரது வாழ்வை பற்றிறும் அறிந்து கொள்வது சிறந்தது.

ஒரு கிறிஸ்தவ பாடல் இறைவனின் அழைப்பை பற்றி பின்வருமாறு பாடுகின்றது.

**அழைத்தீரே என்னை நீர் நாதா**
**உம் பின்னால் வந்தேனா நாதா**
**தாயின் கருவிலே என்னைத் தேர்ந்தவரே**
**என் இயேசுவே உமக்கு நன்றி**
**பலகோடி மனிதர்களிலிருந்து - எனை**
**தேர்ந்து கொண்டீரே நன்றி......**

இந்தப் பாடல் வரிகளிலிருந்து ஒருவருடைய இறையழைப்பை பற்றி எளிதாக அறிய முடிகிறது. என்றாலும் தன்னுடைய குருத்துவ வாழ்வில் வைர விழா கண்ட (60 ஆண்டுகள்) மறைந்த பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகையை பற்றி எழுதுவதற்கு எனக்கு வயதோ, அனுபவமோ கிடையாது என்றாலும், அவரைப்பற்றி நான் அறிந்துள்ளேன். அவருடைய திருப்பணிகளில் பீடப்பணியாளனாக கடமையாற்றியுள்ளேன். அவருடைய கைகளினால் உறுதிபூசுதல் எனும் அருளடையாளத்தைப் பெற்றுக் கொண்டேன் என்ற உயரிய பெருமையுடன் மறைந்த அந்த மாமேதையை பற்றிய ஒரு சில வாழ்க்கைத் துளிகளை எழுதுகின்றேன்.

ஒரு மனிதனை இறைவன் தெரிந்து கொண்டார் என்றால் அது அவனுடைய நன்மைத்தனத்தின் நிகழ்வினால் அல்ல மாறாக இறைவனுடைய மாறாத அன்பினாலும், இரக்கத்தினாலுமே. கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் நல்ல தந்தையாக, பாசமிகு குருவாக, அரவணைப்பில் அன்னையாக இவ்வாறு பல முகங்களைக் கொண்டு பணியாற்றிய பேராயர் இலங்கை திருச்சபையின் உரோமன் கத்தோலிக்க சமயம் இன்றளவும் புகழ்பெற்று விளங்க அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார். அத்தகைய மாபெரும் மனிதனின் வாழ்க்கைக்கு இறைவன் கொடுத்த பரிசு தான் 87 ஆண்டுகால வாழ்வு. “நீங்கள் என்னுடன் இருந்தால் பலன் கொடுப்பீர்கள்” என்ற வாக்கினை ஏற்றுக்கொண்டு, இன்றளவும் இயேசுவின் பாதத்தில் இணைந்து எம்மோடு வாழும் மறைந்த பேராயர் பல மக்களின் உள்ளங்களை கவர்ந்த மாபெரும் தந்தையாக திகழ்கின்றார். அத்தகைய ஆயனுடைய ஆன்ம இளைபாற்றிற்காக செபிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம்.

## பிறப்பும் குடும்ப வாழ்வும்

பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை 1932ம் ஆண்டு மார்கழி மாதம் 6ம் திகதி தாழ்மையும், பக்தியுமுள்ள பெற்றோர்களாக குருகுலசூரிய வில்பிரட் செபரினாஸ் மற்றும் குருகுலசூரிய மேரி லில்லி பெர்னாண்டோ அவர்களுக்கு, நீர்கொழும்பு மீன்பிடி கிராமத்திலே இரண்டாவது மகனாக பிறந்தார். இவருக்கு 4 சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் உள்ளனர். இவர் தனது ஆரம்பக்கல்வியை முன்னக்கரையிலுள்ள உரோமன் கத்தோலிக்க கலப்பு பள்ளியில் பயின்று பின்னர் நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியில் தொடர் கல்வியினை மேற்கொண்டார். இவ்வாறு தனது பாடசாலை வாழ்விலே இணைந்து தனது கல்வியைத் தொடர்ந்த ஆயர் சிறிய மாணவனாக இருக்கும் போதே இறை குரலுக்கு செவிகொடுத்து, திராட்சை தோட்ட ஊழியனாக வேண்டுமென்று தன்னை அர்ப்பணித்தார்.

## இறையழைப்பும், குருத்துவ வாழ்வும்

இறையழைப்பிற்கு பக்தியுடன் பதிலளித்த நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை புனித அலோசியஸ் குருமடத்தில் இணைந்து தொடர்ந்து 1949ல் லண்டன் மெட்ரிகுலேன் இணைந்து 1951ம் ஆண்டு கலைமானி பட்டம் பெற்று 1953ம் ஆண்டு புனித பேணாட் உயர்குருமடத்தில் இணைந்து தனது மெய்யியல் கல்வியைத் தொடர்ந்தார். இவர் தனது கல்வியினை சிறப்பாக மேற்கொண்ட காரணத்தினால் தனது கலைமானி பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 1954ம் ஆண்டு உரோமிற்கு அனுப்பப்பட்டார். அங்கு இறையியல், மெய்யியல் இரண்டிற்கும் கலைமானி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து கர்தினால் அனஜியாஷின் ஆண்டகையினால் 1950ம் ஆண்டு மாசி மாதம் 20ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் 1960ம் ஆண்டு இலங்கை நாட்டிற்கு திரும்பி வந்த இளங்குரு 1960ம் ஆண்டு புனித பேதுரு கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். இதனை



தொடர்ந்து 1973ம் ஆண்டு தனது முதுமானி பட்டத்தை பெற்றுக் கொள்ள உரோமிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு முதல்தர நிலையில் சித்தியடைந்தார். இவருள்ள காலத்தில் புனித அலோசியஸ் சிறிய குருமடத்தின் அதிபராகவும், பின்பு தேசிய குருமடத்தின் பணியாளராகவும் கடமையாற்றினார்.

## இலங்கையின் இளைய பேராயர்

கர்தினால் தோமஸ் ஆண்டகையின் பதவிக்-காலம் முடிவடையவே அவர் தனக்குப் பின்னராக இம்மறைமாவட்டத்தை வழிநடத்த ஒரு ஆயரை தேர்ந்தெடுக்க கடமைப்பட்டிருந்தார். அதிலே ஒரு தகுதியான, அர்ப்பணிப்புள்ள ஒரு குருவை தேர்வு செய்ய வேண்டும். இடைவிடாத செபத்தினாலும், தூய ஆவியின் வழிநடத்தலினாலும் மூன்று பெயர்களை தெரிவு செய்து அனுப்பவே, பரிசுத்த திருத்தந்தையிடமிருந்து செய்தி கிடைத்தது. 1977ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி அச்செய்தி கிடைக்கவே அதனை அறிவித்த கர்தினால் ஆண்டகை, மறைமாவட்டத்தின் புதிய பேராயராக அருட்தந்தை நிக்கலஸ் மாக்கஸ் அடிகளார்

**ஆக்கம் : பெ. டிலோய்ட்சன் பெர்னாண்டே**
**தேசிய குருமடம் கண்டி.**

தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்தார். அருட்தந்தை தனது 44வது வயதில் பேராயராக நியமனம் பெற்றார். இவரே இளம் வயதில் பேராயரானார் என்ற பெருமையும் பெற்றார்.

## முதல் மறைமாவட்ட பேராயர்

மேதகு நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் 7வது பேராயராக கர்தினால் தோமஸ் குரே ஆண்டகையினால் அபிஷேகம் செய்யப்பட்டார். இலங்கையின் முதலாவது மறைமாவட்ட குரு பேராயாரானது முதற்தடவையாகும். இதற்கு முன்னர் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்களே ஆயர்களாக அபிஷேகம் செய்யப்பட்டு, கடமையை நிறைவேற்றி வந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகைக்கு முன், 5 அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்தோர் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்களாக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது

## ஆயர்த்துவ வாழ்வு

இவருடைய 25 ஆண்டு கால ஆயர்த்துவ வழிகாட்டலில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் 34 பங்குகளை நிறுவினார். அதுபோல பரந்துபட்ட பணிகளை மேற்கொண்ட இவர் விசுவாசிகளின் ஆன்மீக ஆயனாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. திருச்சபையின் சவால்களை எதிர்கொண்டு திருச்சபையில் கல்வி, சமூக மற்றும் பல்வேறுபட்ட துறைகளில் பங்களிப்பு செய்து புதிய முயற்சிகளை மேற்கொண்டார்.

இவருடைய காலத்தில் தான் கொழும்பு உயர்மறைமாவட்டத்தை 3 மறைமாநிலங்களாக பிரித்தார். அத்தோடு குருமுதல்வர்களை நியமித்து தமது பணிகளை இலகுபடுத்தினார். இத்தகைய நிர்வாக முறையே அறிமுகம் செய்த பேராயர் பங்குகளை சந்தித்து, குருக்களினதும், மக்களினதும் குறைகளை கேட்டறிந்தார். அதனை நிவர்த்தி செய்வதற்கு முயற்சி-களை மேற்கொண்டு, மக்களோடு மக்களாக தன் பணிகளை மேற்கொண்டார். இவருடைய காலத்தில் பல குருக்களை அபிஷேகம் செய்துள்ளதுடன், பல ஆயர்களின் அபிஷே-கத்தினை துணை ஆயராகவும் பலி நிறைவேற்றியுள்ளார். கிட்டத்தட்ட 172 குருக்களை அபிஷேகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அப்போஸ்தலிக்க நடவடிக்கைகளை மேற்கொ-ள்ள, இறையியல் துறையில் இளமானி பட்டம் பெறுவதற்கு உள்ளூர் பட்டப்படிப்புக்களுக்காக பல்க-லைக்கழகங்களுக்கும், உயர்தரம் சார்ந்த கல்வி தகுதிகளுக்காக குருக்களை ஆயத்தப்படுத்துவதும், வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்தவரும் இப்பேராயரே. இவர் பேராயராக இருந்த காலத்தில் ஆயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஆயர் மேரியஸ் பீரிஸ் ஆண்டகை ஆகியோரை ஆயராக திருப்பொழிவு செய்தார். இவர் இளங்குருக்களை அபிஷேகம் செய்து பங்கு பணிகளுக்கு மட்டுமல்லாது, குறிப்பாக பாடசாலை சேவைகளுக்கும் அனுப்பி வைத்தார். இவருடைய காலத்தில் பல கிறிஸ்தவ தனியார் பாடசாலைகளை ஆரம்பித்து கல்வி நடவடி-க்கைகளுக்காக அயராது பாடுபட்டார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் இன்றளவும் வெற்றிகரமாக தனது பணிகளை முன்னெடுத்துச் செல்வது குறிப்பிடத்தக்கது.

இன்னும் பல கருத்துக்களையும், செயற்பாடு-களையும் கூறிக்கொண்டே செல்லலாம். காரணம் 25 ஆண்டுகளாக கொழும்பு உயர்மறைமாவட்ட பேரா-யராக கடமையாற்றியமை நாம் பெற்ற பாக்கியமே. என்நாளும் பேராயரினால் அபிஷேகம் செய்யப்பட்ட குருக்கள்....

தொடர்ச்சி 07ம் பக்கம்..

## தூய ஆவி பெருவிழா

# “வாழ்வின் ஆதாரம் தூய ஆவி”

**திப 2:1-11, 1கொரி 12:3-7,12.13, யோவா 20:19-23**

**தூய ஆவி, இறங்கி வந்து கன்னிமரியின் வயிற்றில் இயேசுவைக் கருத்தரிக்க செய்ததுபோல இவ்வுலகின் கருவறையில் திருச்சபையை கருத்தரிக்க செய்தருளினார். மரணத்தின் விளிம்பில் வாழ்வு பிறந்தது. அவநம்பிக்கையின் விளிம்பில் தைரியம் பிறந்தது. மூடிய கதவுகள் திறக்கப்பட்டன:**



நன்றி : இணையத்தளம்

அமெரிக்காவில் புகழ்பெற்ற ஏரி, மிக்ஸிகன் ஏரியாகும். அந்த ஏரியில் தை மாதத்தில் தண்ணீரெல்லாம் உறைந்துபோய், பனிக்கட்டி படர்ந்திருக்கும். அந்நேரத்தில் சிறியோரும் பெரியோரும் பனிச்சறுக்கு விளையாட்டு விளையாடுவது வழக்கம். 1984ஆம் ஆண்டு தை 15ந் திகதி 4 வயது பையன் ஜிம்மி தன் தந்தையுடன் விளையாட ஏரிக்குப் போனான். விளையாடிக் கொண்டிருக்கும் போதே திடீரென்று காணவில்லை. பிளந்து போன பனிக்கட்டிகளுக்கிடையே ஆழத்தில் மாட்டிக்கொண்டான். அவனைக் கண்டு பிடிப்பதற்கே 20 நிமிடங்கள் ஆயிற்று. பின்னர் இழுத்து வெளியே போட்டால் சிறுவன் விரைத்துப்போய் உறைந்து கிடந்தான். மூச்சும் இல்லை: இதயத்துடிப்பும் நின்று போயிருந்தது. இருந்தாலும் அங்கே இருந்தவங்க முடிஞ்ச வரைக்கும் என்னென்னவோ பண்ணிப் பார்த்தாங்க. பக்கத்தில் இருந்த ஆஸ்பத்திரியிலேர்ந்து டாக்டர்கள் மின்னல் வேகத்தில் ஹெலிகாப்டரில் வந்திறங்கினார்கள். ஹார்ட் மஸாஜ் செஞ்சாங்க. ரத்தகுழாய் வழியா மருந்தெல்லாம் கொடுத்து பார்த்தாங்க. நுரையீரலுக்குள்ளே காற்றெல்லாம் பம்ப் செஞ்சு போராடிப்பார்த்தாங்க. ஜிம்மி உடம்பெல்லாம் ஹீட் லேம்ப்களை பரப்பி, உடம்பை சூடாக்கினாங்க. ஆனாலும் இதயத்தை ஓட வைக்கனுமே. அதுக்காக ஐந்து முறை எலக்ட்ரிக் ஷாக் கொடுத்துப் பார்த்தாங்க. எந்த முன்னேற்றமும் இல்லை

இருந்தாலும்... இருந்தாலும்... கொஞ்ச நேரத்தில ஒரு நம்பிக்கை வந்துச்சு. என்ன நடந்ததுனா இறந்து போன நிலைமையிலிருந்த அந்த பையன் கோமா நிலைக்கு வந்தான். மூச்சு மட்டும் லேசா ஓடிக்கிட்டிருக்கு. அப்படியே பையனை தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு போனாங்க. மிக்ஸிகனில் உள்ள குழந்தைகளுக்கான மெமாரியல் மருத்துவமனையில் சேர்த்தாங்க. இந்த கோமா ஸ்டேஜ்லேர்ந்து திடீரென்று மீண்டு வந்தாலும் அது ஆபத்தில முடியும். அதனால மருந்தெல்லாம் கொடுத்து மயக்க நிலையிலேயே வச்சிருந்தாங்க. சுமார் 80 நாட்களுக்கு பிறகு, மாற்றம். பையன் கண்ணைத் திறந்தான். அப்புறம் ஒரு வாரம் கழிச்சு, சிரிச்சான். நான்கு மாதங்களுக்குப் பிறகு கை - காலை அசைச்சிருக்கான். ஆறு மாதத்திற்குப் பிறகு வீடு திரும்பினான். 20 நிமிசம் ஐஸ் தண்ணியில மூழ்கியிருந்தால் அதுவும் ஆக்ஸிஜன் இல்லாத நிலைமையில மூளை கெட்டுப் போயிடும். பிழைக்கவே முடியாது. இது மருத்துவ உலகில் இன்றும் பேசப்படுகிற ஒரு சாதனை, மைல்கல், அதிசயம்.

### மரணத்தின் நிழலில் ஒரு வாழ்வு.

இயேசுவின் மரணத்தோடு எல்லாம் முடிந்தது என்றிருந்தது. உயிர்ப்பு ஒரு நம்பிக்கை விதைத்தது. ஆனாலும் பயம், சிலுவை - மரண பயம் திருத்தூதர்களைவிட்டு அகன்றபாடில்லை. நாற்பது நாளும் விசுவாசத்தில் திடப்படுத்தி, எருசலேமைவிட்டு நீங்காமல் ஒரு தாய்ப்பறவை தன் முட்டைகளை ஒன்று சேர்த்து அடைக்காப்பது போல இயேசு அனைவரையும் ஒன்று சேர்த்து விண்ணேற்றம் அடைந்த பத்தாம் நாள், அதாவது உயிர்ப்பிற்குப் பிறகு ஐம்பதாம் நாள் அதாவது பெந்தகோஸ்தே இன்னும் இந்நன்னாளில் தூய ஆவி, இறங்கி வந்து கன்னிமரியின் வயிற்றில் இயேசுவைக் கருத்தரிக்க செய்ததுபோல இவ்வுலகின் கருவறையில் திருச்சபையை கருத்தரிக்க செய்தருளினார். மரணத்தின் விளிம்பில் வாழ்வு பிறந்தது. அவநம்பிக்கையின் விளிம்பில் தைரியம் பிறந்தது. மூடிய கதவுகள் திறக்கப்பட்டன: அடங்கிய கைகள் ஆட்களைக் காட்டின: முனகின குரல்கள் முழங்கின: சிலுவையின் நிழலில் சிறகுகள் முளைத்தன. திருச்சபை பிறந்தது. இந்த பெந்தகோஸ்தே பெருவிழாவில் சிந்தனைப் பொருளாக அமைவது ஆவியின் வருகையால் மலர்ந்து புதுவாழ்வு தான். ஆவியின் செயல்பாடு உயிருள்ளது: ஆற்றல்மிக்கது: வலிமையானது: வாழ்விக்க கூடியது. தூய ஆவியின் ஆற்றலினால்தான் எல்லாமே இயங்கிக்கொண்டிருக்கிறது.

நம்மை என்றும் இடைவிடாமல் தொடர்ந்து வழிநடத்தவே தூய ஆவி அருளப்பட்டிருக்கிறார். “உங்களோடு என்றும் இருக்கும்படி” என்றே தூய ஆவியை ஆண்டவர் இயேசு வாக்களித்திருக்கிறார் (யோவா 14:16). கடவுளின் அன்பு, நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய் நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்துவாழ கடமைப்பட்டிருக்கிறோம். (உரோ5:5). தூய ஆவியின் வருகையால்தான் படைப்பு சிறந்தது: அரசர்கள், நீதிபதிகள், இறைவாக்கினர்கள் மக்களை வழிநடத்தினர்: எல்லாவற்றிற்கும் மேலாக, திரித்துவத்தின் இரண்டாம் நபராகிய கிறிஸ்து கன்னியின் திருவயிற்றில் கருத்தரித்தார்: இருளில் பயத்தில் உறைந்திருந்த திருச்சபை எழுச்சிப்பெற்றது.

### படைப்பின் போது.

உருவமற்று வெறுமையாக இருந்த மண்ணுலகில் உயிரினங்கள் தோன்றவும் இயங்கவும் தூய ஆவி துணை புரிகிறார். உருவமற்று அனைத்துமே அசைவற்று கிடக்கிற நிலையில் தூய ஆவி மட்டுமே அங்கு அசைவாடிக் கொண்டிருக்கிறார்: இயங்கிக் கொண்டிருக்கிறார். (தொநூ1:2). இயல்பிலேயே அவருடைய இயங்குத்தன்மை, உயிராற்றல், காணக்கிடக்கிறது. பிறகுதான் படைப்பே பரிணமிக்கிறது. மனிதனைப் படைத்தபோதும் களிமண்ணின்மீது “ருவா” எனப்படும் உயிர்மூச்சை ஊதும் போதும் அவன் “உயிர் உள்ளவன் ஆனான்” என்று விவிலியம் விளம்புகிறது (தொநூ2:7). இப்படி உண்டாக்கும் ஆற்றலை, உய்விக்கும் சக்தியை இயல்பாகவே தூய ஆவி கொண்டிருக்கிறார். அனைத்தையும் உருவாக்குகிறார்: உய்விக்கிறார்.

படைப்பின் போது உயிரோட்டத்துடன் செயல்பட்ட அதே தூய ஆவி, பராமரிப்பின் போதும் அதே உத்வேகத்துடன் செயல்பட்டார். மோசேவுடன் தூய ஆவி தங்கி ஆற்றல் அளித்து ஆண்டவரின் அளப்பரிய கருவியாக செயல்பட துணைப்புரிந்தார் (எண் 11:25). யோசுவாவை ஆட்கொண்டு வழிநடத்தினார் (எண் 27:18 இச 34:9). நீதிபதிகளை வழிநடத்திய அதே ஆவி அடுத்த தலைமுறையினரையும் அரசர்கள் தேர்ந்து கொள்ளும்போது கைவிடாமல் ஆற்றல் அளித்து வழிநடத்துகிறார். சவுலை, தாவீதை, சாலமோனை (1சாமு16:3) ஆசீர்வதித்து திறம்பட வழிநடத்தினார். இறைவாக்கினரையும் ஆண்டவரின் சார்பாக இறைவாக்குரைக்கவும் மக்களை நெறிப்படுத்தவும் உதவுகிறார் (யோபு 33:4 எசா. 61:1.)

### உலர்ந்துபோன எலும்புகள் ... உயிர்பெற

எசேக்கியேல் இறைவாக்கினருக்கு கொடுத்த காட்சி விளக்கத்தில்கூட உலர்ந்து போன எலும்புகள், ஆவியின் ஆற்றலால் செயல்பாட்டால் உயிர் பெறுகின்றன. நான் உங்களுக்குள் உயிர் மூச்சு புகச் செய்வேன். நீங்கள் உயிர் பெறுவீர்கள்: நான் உங்களை நரம்புகளால் தொடுப்பேன்: உங்கள்மேல் சதையைப் பரப்புவேன்: உங்களைத் தோலால் மூடுவேன். (எசே 37:5-6) என்று ஆவியின் செயல்பாட்டால் விளையும் உயிராற்றலை வெளிப்படுத்துகிறார். உயிர்மூச்சே வா! நீ வந்து கொலையுண்ட இவர்களுக்குள் புகு. அப்பொழுது இவர்கள் உயிர் பெறுவர்... உடனே அவர்களுக்குள் உயிர் மூச்சு புகுந்தது. அவர்கள் உயிர்பெற்று காலூன்றி, மாபெரும் படைத்திரள்போல் நின்றனர் (எசே 37:9-10). ஆவியின் வருகையால் அனைத்தும் உயிரோட்டம் பெறுவதையும் ஆற்றல்பெற்று புதிய படைப்பாவதையும் காண்கிறோம். ஆவியின் வருகை ஆற்றலின் ஊற்றாகும். இறைவனின் ஆவி என்னைப் படைத்தது: எல்லாம் வல்லவரின் மூச்சு என்னை வாழ்விக்கின்றது. (யோபு. 33:4) என்ற யோபுவின் அனுபவம் நமதாக வேண்டும்.

### திக்குமுக்காடிப் போன திருச்சபை:

ஆண்டவரின் உயிர்ப்பு ஆறுதலைத் தந்தாலும் திருத்தூதர்களின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இன்னும் பயம் அகலவில்லை: கதவுகளை மூடி உயிருக்குப் பயந்து போராடிய கோழைத்தனம் குறையவில்லை. “இனி அவ்வளவுதான்” என்ற நிலையில்... விளிம்பில் ஆதித்திருச்சபை, திருத்தூதர்கள் தத்தளிக்கின்றனர்: தடுமாறுகின்றனர். ஆனால் ஆண்டவர் இயேசுவின் வாக்குறுதி நம்மை ஆறுதல்படுத்தி ஆற்றல்படுத்துகிறது. “நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்” என்று தூய ஆவியை வாக்குறுதியாக தரும்போது சொல்லுகிறார். (யோவா 14:18) திக்குத்தெரியாமல் எருசலேமா, கலிலியேயாவா, எம்மாவுவா என்ற தெரியமால் தடுமாறுகிறவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து யெருசலேமிலேயே தங்கும்படி செய்கிறார். குறைபாடு உள்ள அவர்களை அழைத்த ஆண்டவர் படைப்பின் போது குறிப்பிடப்பட்டது போல “ஊதி” தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். ஆதாமைப் படைத்த போது உயிர்மூச்சை ஊதியதைப் போன்று அவருடைய அப்போஸ்தலர்கள் மீதும் புதிய படைப்பாகிட ஊதுகிறார். எப்படி ஆதாம் ஆண்டவரின் ஆவியால் இறைவனின் சாயலனானோ அப்படியே இந்த அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவின் சாயலாக மாறுகின்றனர். இந்த “ஊதுதல்” என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் காணப்படவில்லை. புதிய படைப்பு அரும்புகிறது: புனிதமான புரிதல் மலர்கிறது.

### பெந்தகோஸ்தே அனுபவம்


ஆண்டவருடைய விண்ணேற்றத்திற்குப்பின்பு பத்து நாட்களுக்கு ஆதியிலே மண்ணுலக வெறுமையாக உருவற்று இருந்ததுபோல தற்போது திருச்சபையும் திக்குமுக்காடி திசைத்தெரியாமல் என்ன செய்வதென்று அறியாமல் முடங்கிக் கிடந்தது. ஆனால் பெந்தகோஸ்தே பெருவிழாவிலே கூடியிருந்தவர்களெல்லாம் கருத்தரித்தார்கள். கன்னியின் கருவயிற்றில் உருவிலான் கருவாக உருவாக உதவிய அதே ஆவியானவர் கூடியிருந்தவர்கள் எல்லோரும் மீதும் இறங்கி வந்து திருச்சபையைக் கருத்தரிக்க செய்கிறார்: கூடியிருந்தவர்களெல்லாம் திருச்சபையை தங்கள் வாழ்வில் கருத்தரிக்கிறார்கள். நம்முடைய தாய்மொழியில் உறவாடுவதைக்கண்டு ஒருவர் ஒருவரை முழுமையாகப் புரிந்துக்கொள்கின்றனர்: ஒரே இனம் என்ற ஒருமைத்துவத்தை அடைகின்றனர்: வேற்றுமை கலைகின்றனர். திருச்சபை மலர்கின்றது. “இயேசுவே ஆண்டவர்” என்ற விசுவாச கீதம் விண்ணை அடைகிறது. கிரேக்கராயினும் அடிமைகளாயினும் உரிமைக் குடிமக்களானாலும் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் உயிர்பெறுகின்றனர்: திருச்சபை பிறக்கிறது.

### திருச்சபையின் பயணத்தில்..

விருத்தசேதனமா? (யூதரா) திருமுழுக்கா? (புறவினத்தானரா) எது கிறிஸ்தவனைத் தீர்மானிப்பது என்ற இக்கட்டான நிலை வரும்போது கொர்னேலியுவின் இல்லத்தில் ஏற்பட்ட பேதுருவின் அனுபவமும் (திப 10:44, 11:15) புனித பவுல் - பர்னபாவின் அனுபவமும் ஒருமித்துப் போன காரணத்தினால் திருமுழுக்கே கிறிஸ்தவரை தீர்மானிக்கட்டும் என்ற வரையறை திருச்சபையின் திருப்புமுனையாக அமைந்தது. இதற்கெல்லாம் அடிப்படை தூய ஆவியே (திப 15:15). இன்று நாம் பெரிதும் மதித்துப் போற்றுகின்ற 22ம் திருச்சங்கமான இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட (11.10.1962 - 08.12.1965) தூய ஆவியின் ஆற்றலால் தான். படைப்பின் தொடக்கம் முதல் இன்று வரை ஆவியின் ஆற்றலால்தான் அனைத்தும் இயங்குகிறது. உயிரோட்டமுள்ளதாக பரிணமிக்கிறது.

மாந்தர் யாவர்மேலும் பொழியப்பட்டுள்ள தூய ஆவி (யோவே 2:28), உங்களோடு தங்கியிருக்கிறார். உங்களுக்குள்ளும் இருக்கிறார் (யோவா 14:17): ஆகையால் உலகின் கடையெல்லைவரைக்கும் சாட்சிகளாய் இருந்து (திப. 1:8) ஆவியால் இயக்கப்பட்டு கடவுளின் மக்களாக இருப்போம் (உரோ8:14). தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி நம்மை நிறைப்பதாக (உரோ. 14:17). தூய்மை, அறிவு, பொறுமை, நன்மை, ஆகிய தூயஆவியின் கொடைகளும், (2 கொரி. 6:6) அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை ஆகிய கனிகளும் நம்மை நெறிப்படுத்துவதாக (கலா. 5:22). ஆமென்!

**என்னை ஒளிரச் செய்து வழிகாட்டும்! புது வலுவூட்டி என்னைத் தேற்றும்! என் கடமை என்னவென்று காட்டும்! அதைக் கருத்தாய் புரிந்திடத் தூண்டும்! என்ன நேர்ந்தாலும் நன்றி துதி கூறி பணிவேன் என் இறைவா! உந்தன் திருவுளப்படி என்னை நடத்தும்! [ ஓ! பரிசுத்த ஆவியே!]**



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பொதுக்காலத்தின் 10வது ஞாயிறு**
**தூய தீர்த்துவப் திருவிழா (07.06.2020)**

## ▸▸ பேதுரு ◂◂

**வாசக விளக்கம்:** தந்தை மகன் தூய ஆவி எனும் மூவொரு கடவுளின் பெருவிழாவைக் கொண்டாட வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களே! அன்பின் சகோதர சகோதரிகளே! இன்றைய விழா ஒரு மறையுண்மையின் விழாவாக நமக்குத் தரப்பட்டுள்ளது. இறைமகன் இயேசு தனது வாழ்வில் தான் தன் தந்தையிடமிருந்து வந்ததாகவும், தந்தையிடம் திரும்பிச் செல்வதாகவும், தூ ய ஆவியை அனுப்புவதாகவும் கூறியுள்ளார். “தந்தையும் நானும் ஒன்றே நான் தந்தையுள் இருக்கிறேன். தந்தை என்னுள் இருக்கிறார்” என்று கூறி தந்தைக்கும் தனக்கும் உள்ள நெருங்கிய உறவை வெளிப்படுத்தியிருக்கிறார். தந்தை மகன் தூய ஆவி மூவரும் ஒரே அன்பில் இணைந்து ஒன்றித்திருப்பது போல நாம் ஒவ்வொருவரும் உறவில் வாழ மூவொரு இறைவன் அழைப்பு விடுக்கின்றார். இந்த அழைப்பை உணரும் நாம் அமைதியிலும் அர்ப்பணத்திலும் நிலைத்திருக்கவும், நமது தொழிலிலும், ஏற்றிருக்கும் கடமைகளிலும் சரிவர ஈடுபடவும் வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் மனப்பக்குவம் கொண்டவர்களாகவும் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குகொள்வோமாக.

**முதல் வாசகம் : வி.ப 34:4-6, 8-9**
இரக்கமும் பரிவும் உள்ளவர் இறைவன்.

**பதிலுரைப் பாடல் :**
என்றென்றும் நீர் புகழப் பெறவும், ஏத்திப் போற்றப் பெறவும் தகுதியுள்ளவர்.

**இரண்டாம் வாசகம் : 2 கொரி 13: 11-13**
இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூ ய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா, அல்லேலூயா! இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவருமான கடவுள், தந்தை, மகன், தூய ஆவியாருக்கு மகிமை உண்டாகுக. அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 3:16-18**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

எல்லாம் வல்ல ஒப்பற்ற தலைவரே இறைவா, திருஅவையோடும் அதனை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள், அருட்பணியாளர், துறவியரோடும் இணைந்து பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்னும் மூவொரு கடவுளின் பெருவிழாவை சிறப்பிக்கும் இறைமக்களாகிய நாமனைவரும் இந்த மறையுண்மையில் நம்பிக்கை கொண்டவர்களாக என்றும் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

தேவனின் திருமகனாகிய இயேசுவே இறைவா! கொடிய நோயின் அச்சுறுத்தலால் முடங்கி இருந்த உலகையும் மக்களையும் காப்பாற்றி குணமளிக்கும் உம்முடைய தெய்வீகக் கிருபையால் பல லட்சம் மக்களை குணப்படுத்தி மறுவாழ்வு கொடுத்த உமது கிருபைக்காக எமது நன்றிகளை ஏற்று தொடர்ந்தும் எம்மைக் காத்தருள வேண்டுமென்று...

புதுப்பித்து வழிநடத்தும் ஆவியே இறைவா, கடவுளைப் பற்றி வேண்டாத விவாதம் செய்யாது செபம், தவம், தியானம், இறைவார்த்தை வழியாக இறைவனால் ஆட்கொள்ளப்படும் போது இறைவனை முழுமையாக நாம் உணர முடியும். அந்த மூவொரு இறைவனை நாம் வாழ்விலே மையப்படுத்தி எல்லா செயற்பாட்டிற்கும் தொடக்கமும் முடிவுமாக மூவொரு இறைவனைப் போற்றி வாழ வரமருள வேண்டுமென்று...

**கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தப் பெருவிழா**
**(14.06.2020)**

**வாசக விளக்கம்:** அன்பின் இறைமக்களே, இன்று நம் தாய்த் திருஅவை கிறிஸ்து இயேசுவின் திருவுடல், திருஇரத்தப் பெருவிழாவை கொண்டாடுகின்றது. தன்னையே நமக்காக உடைத்து தனது திருவுடலையும், திருஇரத்தத்தையும் சிந்தும் இயேசுவின் அர்ப்பணம் இப்பெருவிழாக் கொண்டாட்டத்தின் மையமாய் அமைகின்றது. இறைவன் “எந்நாளும் நான் உங்களோடு இருப்பேன்” என்ற வாக்குறுதிக்கேற்ப தனது தெய்வீகப் பிரசன்னத்தை இந்த நற்கருணையில் விட்டுச் சென்றுள்ளார். திருஅவையும் தொடக்கத்திலிருந்தே நற்கருணையைப் போற்றி வந்துள்ளது. நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் அடையாளம் திரிதெந்து திருச்சங்கமும் திருப்பலியில் நடைபெறும் உட்கருப்பொருள் மாற்றத்தை வலியுறுத்துகின்றது. சாதாரண அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் திருவுடலாகவும் திரு இரத்தமாகவும் மாறுகிறது. தமது நடைமுறை வாழ்க்கையில் நற்கருணை ஆண்டவர் மீது நாம் முழுநம்பிக்கை விசுவாசம் கொள்கின்றோமா? இரண்டாவது வாசகத்தில் தூய பவுல் கூறுவதுபோல ஒரே அப்பத்திலும் ஒரே கிண்ணத்திலும் பங்கெடுக்கும் நிகழ்வு நம்மிடையே ஒற்றுமையை வளர்க்கின்றதா? சிந்தித்து செயல்பட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : இ.ச 8:2-3, 14-16**
நீங்களும் உங்கள் மூதாதையாரும் அறிந்திராத மன்னாவினால் உங்களை உண்பித்தார்.

**பதிலுரைப் பாடல் :**
எருசலேமே! ஆண்டவரைப் போற்றுவாயாக!

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 10:16-17**
அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா, அல்லேலூயா! விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 6:51-58**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
நற்கருணை நாதரே இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்துவின் திருஉடல், திருஇரத்தப் பெருவிழா இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கையின் பெருவிழா, இதனை கொண்டாடும் திருஅவையின் பணியாளரும், இறைமக்களும் விசுவாசத்தின் மறைபொருளான நற்கருணையின் பக்தியை வளர்க்க என்றும் பாடுபட்டு உழைத்திட வரமருள வேண்டுமென்று...

கொடிய நோயின் பிடியிலிருந்து எம்மைக் காப்பாற்றிய நற்கருணை நாதருக்கு நாம் என்றும் நன்றியுள்ளவர்களாக வாழவும், கிறிஸ்துவின் உடலும் இரத்தமும் கிறிஸ்துவின் மனித தசையும் மனித இரத்தமும் என்று உணர்ந்தவர்களாக குணமளிக்கும் தெய்வீக விருந்தான நற்கருணை மீது என்றும் நம்பிக்கையுள்ளவர்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

இரத்தம் உயிர் வாழ இன்றியமையாதது கிறிஸ்து இரத்தத்தையே சிந்தி உலக மக்களின் பாவங்களைப் போக்கினார். அதேபோல் ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்றவர்களுக்காக, மற்றவர்களின் விடுதலைக்காகப் போராடவும், நற்கருணையில் ஆண்டவரின் பிரசன்னத்தை எமது விசுவாசக் கண்களால் கண்டுகொள்ளவும் ஒன்றுபட்ட சமாதான வாழ்வை வாழவும் வரமருள வேண்டுமென்று...

## 05 மறைந்தும் மறையாமல்...

இன்றும் அவருக்கு அளவுக்கதிகமான அன்பினை செலுத்துவதை காணலாம். குறிப்பாக ஒரு குருவானவரின் அகநலன்களை அறிந்து கொள்ள பங்கு பணிமனைக்கு சென்று அவருடைய நலன் விசாரித்து ஒரு தந்தையாக வழிகாட்டியமை குறிப்பிடத்தக்கது. இன்றளவும் “நிக்கலஸ் மாக்கஸ்” என்ற பெயர் ஒலிக்கிறதென்றால் அவர் ஒரு குருவானவர், ஆயர் என்பதைவிட மக்களின் ஏகோபித்த மக்களின் கருத்து அவர் ஒரு சிறந்த கடவுளின் மனிதர். (The Man of God) பேதுருவின் அடிச்சட்டை பின்பற்றிய ஒரு புனிதர். மூன்று தசாப்த காலமாக அவருடைய ஆயர்த்துவ வாழ்வை மிகவும் பணிவாகவும், மனத்தாழ்மையுடனும் நிறைவேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை தாய்திருநாட்டை நேசித்த ஒரு மனிதர். இன்றளவும் மக்கள் மனங்களில் வாழும் மனிதர் நான் சிறுவனாக, பீடப்பணியாளனாக இருக்கின்றபோது, அதிகம் மக்களால் பேசப்பட்ட ஒரு ஆயர். தனது இணை ஆயர்களுடன் இணைந்து (இலங்கை ஆயர் பேரவையின் தலைவர் 1989 - 1995) மக்களின் ஆன்மீக வழிகாட்டலுக்காக அயராது உழைத்தது அவருடைய பணியின் சிறப்பினை காட்டுகின்றது.

### இறுதியாக

'To speak the truth in love" (அன்பில் உண்மையை எடுத்துரைக்க) என்ற மகுட வாசகத்தினை மணிமுடியாக கொண்டு, தனது 25 வருட கால ஆயர்த்துவ வாழ்விலும், 60 ஆண்டுகால குருத்துவ வாழ்விலும் இறைவனில் விசுவாசங் கொண்டு, தனது அன்பினால் உண்மையை வெளிப்படுத்தி, மறைந்தும் எல்லோர் உள்ளங்களிலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற “புனிதர்” நம் பேராயரின் ஆன்ம இளைபாற்றிற்காக செபிப்போம். ஆயருடைய இறுதி சடங்கில் பங்கு கொண்ட யாவரும் அவரைப் பற்றிய சிந்தனைகளை வழங்கி இலங்கை அரசாங்கமும் அரச மரியாதையை கொடுத்து அவர் செய்த பணிகளுக்காக அவரை கௌரவப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. தற்போது எம் நாட்டின் அசாதாரண நிலை காரணமாக அவருடைய இறுதிச் சடங்கு எளிமையான முறையிலேயே நடைபெற்றது. என்றாலும் அவருடைய உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த



படங்கள் : ரொஷான் பிரதீப், மற்றும் T. சுனில்

வந்தோர் பலர். பல குருக்கள் ஒன்று திரண்டமையும் குறிப்பிடத்தக்கது. என்றாலும் எளிமையாக நடைபெற்ற அவருடைய இறுதி சடங்கை நான் பார்த்துக் கொண்டிருந்த போது என்னுள்ளே எழுந்த சிந்தனை தான் 2007ம் ஆண்டு ஓய்வுபெறும் நாள் வரை அனைவரின் நன்மதிப்பை பெற்றவர் யாருடைய பழிச்சொல்லுக்கும் ஆளாகாதவர் அதுபோல யாருக்கும் பாரமாக இருக்கவில்லை, அது போல ஓய்வு பெற்ற பின்னும் ஒருவருக்குமே பாரமாக இராமல் அன்பாக அனைவருடனும் நடந்து கொண்டு தன் வாழ்க்கை பயணத்தை முடித்தவர் இறந்த பின்னும் யாருக்கும் பாரமாக இருக்காமல் எளிமையான முறையில் அவருடைய இறுதி சடங்கை நிகழ்த்த இறைவனும் திட்டங் கொண்டரோ என்று சிந்திக்க என்னை அழைத்தது. உன்னதமான வாழ்வில் இறைவன் தந்த அழகிய வாழ்வில் இணைந்து இறைபணியாளனாகவே வாழ்ந்து இறைபணியாளனாகவே இறந்து இன்று இறைவனின் இல்லத்தில் எம் ஒவ்வொருவருக்காகவும் பரிந்து பேசிக் கொண்டிருக்கின்றார் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. இவர் மறைந்தும் மறையாமல் வாழும் புனிதர் உண்மையிலேயே நான் என் வாழ்வில் கண்ட கடவுளின் மனிதர். இறைவன் இவரையும் புனிதராக உயர்த்துவார் என்பது எம் எல்லோரினதும் நம்பிக்கை. எம் நாட்டில் பிறந்து எம்மோடு இணைந்து எமக்காக பணிபுரிந்து ஒரு தூய வாழ்வு வாழ்ந்த இவரை இறைவன் தன் புனிதரின் கூட்டத்தில் சேர்க்க வேண்டுமென்பதே எனது அன்றாட செபமும் கூட. எனவே நாம் ஒவ்வொருவரும் அவரை பற்றி அறிந்துள்ளோம் அவருடைய வாழ்வை முன்னுதாரணமாக கொண்டு எமது வாழ்வையும் இறைவனுக்கு உகந்த வாழ்வாக்குவோம்.

## திவ்விய நற்கருணை வழங்குதல் தொடர்பாக கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் வெளியிட்ட சிறப்பு அறிவித்தல்.

# “எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்”

## [லூக்கா 22 :19 ]



1. நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து தனது மரணத்திற்கு முன்னர் தம் சீடர்களுடன் இறுதி இராவுணவு அருந்திக் கொண்டிருந்தபோது சிலுவைமீது இடம்பெறவிருந்த தனது மரணத்தை என்றென்றும் உயிருள்ள அருளடையாள அனுபவமாக மாற்றி அவரது மரணம் மற்றும் உயிர்ப்பின் மறைபொருளை தூய திருச்சபையினதும் அனைத்து விசுவாசிகளினதும் வாழ்வின் உணவாக மாற்றினார்.

2. இதற்காக அவர் தம் சீடர்களுடன் பாஸ்கா உணவு அருந்திக் கொண்டிருந்தபோது அவரது திருக்கரத்தில் அப்பத்தை எடுத்து, “நீங்கள் அனைவரும் இதை வாங்கி உண்ணுங்கள் மெய்யாகவே இது உங்களுக்காக கையளிக்கப்படும் என் உடல்” என்று அவர்களுக்கு கூறினார்.

3. அவ்வண்ணமே திராட்சை இரசம் நிறைந்த கிண்ணத்தை எடுத்து தம் சீடர்களுக்கு அளித்து அவர் கூறியதாவது: “அனைவரும் இதை வாங்கிப் பருகுங்கள் ஏனெனில், இது புதிய, நித்திய உடன்படிக்கைக்கான என் இரத்தம். இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகவும், எல்லாருக்காகவும் சிந்தப்படும். இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்று தம் சீடர்களுக்கு பணித்தார்.

4. அன்று முதல் அவ்வாறே கிறிஸ்துவின் உயிர்ப்பு மற்றும் பெந்தக்கோஸ்து நாளன்று சீடர்கள் மீது தூய ஆவியானவர் பொழியப்பட்ட பின்னர், திருத்தூதர்கள் ஆண்டவர் தமது இறுதி இராவுணவின்போது அவர்களுக்கு கட்டளையிட்டதை பின்பற்றி உயிர்த்த ஆண்டவரின் பிரசன்னத்தை தூய அப்பத்தில் கண்டுகொண்டு அன்பு மற்றும் பகிர்வில் சகோதர குழுமமாக வளர்ச்சி அடைந்தார்கள்.

5. அந்த அனுபவத்தினுள் சீடத்துவ குழுமமாக அவர்கள் ஒன்றிணைந்த அனைத்து தருணங்களிலும் ஆண்டவர் கேட்டுக் கொண்டதன்படி தூய திருப்பீடத்தின் மீது அவரின் கல்வாரி பலியையும் கிறிஸ்துவின் மகிமை நிறைந்த உயிர்ப்பினையும் மீண்டும் மீண்டும் நினைவுக்கூர வேண்டும் என்பதை திருச்சபை உறுதியாக நம்பியது. இவ்வாறு திவ்விய நற்கருணை தூய திருச்சபையின் ஒன்றிப்பின் அருளடையாளமாக மாற்றம் பெற்றது. மெய்யாகவே திவ்விய நற்கருணையானது திருச்சபையைக் கட்டி எழுப்பவும் மென்மேலும் அதை வலுப்படுத்தவும் வழிவகுத்தது. இவ்வாறு தூய திருச்சபை பல நூற்றாண்டுகளாக கிறிஸ்துவின் திருவுடல் மற்றும் திரு இரத்தத்தினால் போஷிக்கப்பட்டு அந்த திவ்விய வல்லமையினால் வலுவூட்ட பெற்று விசுவாச பற்றுதலோடு கிறிஸ்துவின் பின் சென்றது. அன்றுமுதல் இன்றுவரை திவ்விய நற்கருணை என்பது கிறிஸ்துவே எனவும், அது அவரது அளவற்ற அன்பின் ஊற்று எனவும் தூய திருச்சபை மரியாதையோடு ஆராதனை செலுத்தி வருகிறது.

6. திருப்பலியில் அப்பம் மற்றும் திராட்சை இரசம் இயேசு கிறிஸ்துவின் திருவுடல் மற்றும் திரு இரத்தமாக மாறுவதுபற்றி திருச்சபையின் நம்பிக்கை பற்றிய தெளிவான விளக்கமானது பிற்காலத்தில் (1545 - 1563) காலப்பகுதியில் நடைபெற்ற திரிதெந்தின் பொதுச் சங்கத்தில் வழங்கப்பட்டது. இந்த பொதுச் சங்கத்தின்போது சுட்டிக்காட்டப்பட்டது என்னவென்றால் “திருப்பலியில் நற்கருணை வழிபாட்டில் அர்ப்பண செபத்தின் பின்னர் அப்பம் மற்றும் இரசம் மூலப் பொருளிலிருந்து மாற்றம் பெற்று அப்பம் இயேசுவின் திரு உடலாகவும் திராட்சை இரசம் அவரது திரு இரத்தமாகவும் மாற்றம் பெறுகிறது என்பதாகும். இந்த மூலப் பொருள் மாற்றம்பற்றி சுட்டிக்காட்ட பொருத்தமான மற்றும் சிறந்த வார்த்தை என்னவென்றால் ‘மூலப்பொருள் மாற்றம்’ (Transubstantiation) என்பதாகும். (காண்க. திரிதெந்தின் பொதுச் சங்க ஏடு இலக்கம் 722)

7. அன்று முதல் இன்றுவரை இந்த இறை மறை உண்மைகளை திருச்சபை படிப்பினை மற்றும் திருச்சபையின் வாழ்வில் தொடர்ந்து எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒருமுறை தூய இரண்டாம் யோவான் பவுல், திருத்தந்தை ஆறாம் பவுல் திருத்தந்தையின் “Mysterium Fidei” எனும் அப்போஸ்தலிக்க திருமடலை சுட்டிக்காட்டி இவ்வாறு கூறினார் “திவ்விய நற்கருணை என்பது கிறிஸ்துவின் உயிருள்ள பிரசன்னமாக இருப்பதால் அதன் உண்மை விளக்கம் எதுவென்றால் உயிருள்ள ஒரே இறைவன் மற்றும் ஒரே மனிதனாகிய இயேசுகிறிஸ்துவின் மிகவும் வல்லமை நிறைந்த பிரசன்னம் என்பதாகும்”. (Ecclesia de Eucharistia, 15)

16ம் பெனடிக்ட் திருத்தந்தை இந்த ‘மூலப் பொருள் மாற்றத்தை’ (Transubstantiation)ஐ பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். “ஒரு அணுவின் கருவில் உண்டாகும் வெடிப்பைப்போல, வாழ்க்கையின் அடி ஆழத்திலிருந்து தொடங்கி வாழ்வின் முழு யதார்த்தத்தையும் முழுமையாக மாற்றம் பெறச் செய்யும் மாற்றமாகும்.” (Sacramentum Caritatis :11). இங்கு திருத்தந்தை குறிப்பிடுவது என்னவென்றால் அப்பம் மற்றும் திராட்சை இரசம் கிறிஸ்துவின் திருவுடலாகவும் திரு இரத்தமாகவும் மாற்றப்படும் செயல்பாடு மட்டுமன்று அவரை உட்கொள்ளும் நாமும் அவரோடு ஒன்றிணையப்படும் செயற்பாட்டினை பற்றியதாகும்.

உண்மையாகவே இங்கு இடம்பெறுவது என்னவென்றால் திவ்விய நற்கருணை ஆண்டவர் எமது வாழ்வின் பகுதியாக மாற்றம் பெறுவதை பார்க்கிலும் நாம் அவரின் வாழ்வோடு ஈர்க்கப்பட்டு அவருடைய பகுதியாக மாற்றம் பெறுவதாகும்.

> **“திவ்விய நற்கருணை என்பது கிறிஸ்துவின் உயிருள்ள பிரசன்னமாக இருப்பதால் அதன் உண்மை விளக்கம் எதுவென்றால் உயிருள்ள ஒரே இறைவன் மற்றும் ஒரே மனிதனாகிய இயேசுகிறிஸ்துவின் மிகவும் வல்லமை நிறைந்த பிரசன்னம் என்பதாகும்”.**

8. எனவே திவ்விய நற்கருணைமீது நாம் நம்பிக்கை கொண்டு ஆராதனை செலுத்தி கொண்டாடப்பட வேண்டியதோடு வாழப்பட வேண்டிய ஒரு யதார்த்தமாகும். அது எம்முள் நாம் வாழ்கின்ற வாழ்வை மாற்றத்திற்கு இட்டுச் செல்கின்ற கிறிஸ்துவின் வல்லமையாகும். அவர் எமக்கு அவருடைய திரு உடலையும் திரு இரத்தத்தையும் உட்கொள்ள எமக்கு அழைப்புவிடுப்பது எதற்காகவென்றால் நாமும் அவரைப் போன்று நிறை வாழ்வில் உரிமையாளர்கள் ஆவதற்கேயாகும். “வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது... விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன்.” (யோவான் 6:35,51)

9. மேலும் திருச்சபையின் ஒன்றிப்பானது கட்டியெழுப்பப்படுவதும் திவ்விய நற்கருணை அருளடையாளத்திலேயாகும். அவ்வாறாயின் அது திருச்சபையின் ஒன்றிப்பையும் கட்டியெழுப்புகின்றது. ஏனென்றால், ஆண்டவரின் கல்வாரி பலி எமது திருப்பீடத்தின் மீது ஒப்புக்கொடுக்கப்படும் ஒவ்வொரு முறையும் நாங்கள் அவரோடு இணைக்கப்படுகின்றோம். அதனூடாக நாங்கள் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் உறுப்பினர்களாக மாறுகின்றோம். “அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா? அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்கு கொள்கிறோம்,” என்று தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமடலில் இவ்வாறு ஒற்றுமையைப் பற்றியே பேசுகின்றார். (1கொரி10:16,17) எனவே திவ்விய நற்கருணை வழியாக நாமும் கிறிஸ்துவோடு ஒன்றிணைக்கப்படுவதோடு அதனூடாக மிக ஆழமாகவும், உடல் ரீதியாகவும் தூய திருச்சபையோடு ஒன்றிணைக்கப்படுகின்றோம். இவ்வாறு திவ்விய நற்கருணை திருச்சபையை கட்டியெழுப்புகின்றது.

தூய திருச்சபை திவ்விய நற்கருணையை வாழ்விக்கிறது.

10. திவ்விய நற்கருணை என்பது நமதாண்டவர் என்பதினால் கத்தோலிக்கர்களாகிய எமக்கு திவ்விய நற்கருணை என்பது எமது வாழ்வாகும். திவ்விய நற்கருணை இல்லையென்றால் எமது வாழ்வு வேரற்று போய்விடும். பொருளற்று போய்விடும். நான்காம் நூற்றாண்டு காலப்பகுதியில் உரோமை பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்த வட கொரியாவின் அபிதேனே எனும் நகர வாசிகளுக்கு திருப்பலியில் பங்குபற்ற உரோமை பேரரசு தடைசெய்யப்பட்டிருந்தபோது பல துன்பங்களுக்கும் மரண அச்சுறுத்தல்களுக்கும் முகம்கொடுத்தாலும் நாங்கள் திருப்பலியில் கலந்துக்கொள்ளாமல் திவ்விய நற்கருணை பெற்றுக்கொள்ளாமல் இருப்பதைவிட வாழ்வை பலியாக்கி மறை சாட்சிகளாக மடிந்து போவது நல்லது என அவர்கள் கூறினார்கள்.

திருப்பலியில் பங்குபற்றாமல் திவ்விய நற்கருணை பெற்றுக்கொள்ளாமல் ஞாயிறு திருப்பலி இல்லாமல் எங்களால் வாழ முடியாது என அவர்கள் தங்களை துன்புறுத்தியவர்களுக்கு கூறினார்கள். அவ்வாறே அவர்கள் திவ்விய நற்கருணை ஆண்டவருக்காக தங்கள் வாழ்வை பலியாக்கி மறைசாட்சிகளானார்கள்.

11. அன்பான சகோதர சகோதரிகளே, இது வெறுமனே அபிதேனே மறைசாட்சிகளுக்கு மட்டும் உணர்த்தப்பட்ட விடயம் அல்ல. பல நூற்றாண்டுகளாக எம் சகோதர சகோதரிகளும் உணர்ந்துக் கொண்ட ஒரு விடயமாகும். தற்போது உலகளாவிய ரீதியில் பரவி இருக்கும் கொவிட் -19 தொற்று நோயை கட்டுப்படுத்த எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகளின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள தடைகளின் காரணமாக ஆலயங்களில் திருப்பலி நிறைவேற்ற இயலாததால் இலங்கையில் வாழும் எமக்கும் அபிதேனே மக்கள் உணர்ந்ததைப் போன்று தற்போது நாமும் உணர்ந்துக்கொண்டு இருக்கின்றோம் என்று கூறலாம். கத்தோலிக்கர்களாகிய எமக்கு திவ்விய நற்கருணை ஆண்டவர் இல்லாமல் வாழ இயலாது. நாங்கள் நற்கருணையை பெறும் வரையும் மிகுந்த ஆவலோடு காத்திருக்கின்றோம். கொவிட்-19 தொற்று நோயானது கத்தோலிக்கர்களாகிய எமது வாழ்க்கை முறை, திருப்பலியில் கலந்துக் கொள்ளுதல் மற்றும் அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வது பற்றிய முக்கியமான விடயங்களை பற்றியும் எமக்கு நன்கு சுட்டிக்காட்டியுள்ளது. எனவே அபிதேனே மறைசாட்சிகளின் உணர்வுப்பூர்வமான அனுபவத்தை அதாவது “திவ்விய நற்கருணை பலி இல்லாமல் இனிமேலும் வாழ முடியாது”

என்பது தற்போது எம்முடைய உணர்வாகியுள்ளது. எனவே உங்களின் தலைமை ஆயரான நான் கொவிட் - 19 தொற்று நோய் பரவியுள்ள இச்சூழ்நிலையில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் திருப்பலி நிறைவேற்றுவது தொடர்பான சில அறிவுறுத்தல்களை உங்கள் கைக-ளில் கிடைக்கப்பெறச் செய்ய வேண்டுமென என எண்ணி-னேன்.

**அ)** அரச அதிகாரிகளினால் அனுமதி வழங்கப்பட்ட உடனே வழமைபோல எமது அனைத்து ஆலயங்களிலும் திருப்பலிகள் நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். முன்புபோல் ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அருளடையாளங்கள் வழங்கப்படும். மக்களின் வாழ்க்கை முறை சாதாரண நிலைக்கு திரும்பிய பின்னரும், இந்த தொற்று நோயின் நிலை தொடரப்பட்டால் சுகாதார அதிகாரிகள் எமக்கு வழங்குகின்ற அறிவுறுத்தல்களின்படி முக கவசம் அணிதல், ஒவ்வொருவருக்கிடையே பேணப்பட வேண்டிய சமூக இடைவெளியை பேணி ஆலயத்தில் அமர்தல், கைகளை கழுவுதல், போன்ற கிருமி ஒழிப்பு செயற்பாடுகளை பின்பற்ற நேரிடும். தற்போது திருப்பலி ஒப்புக்கொடுக்கும் முறையில் மாற்றங்களை மேற்கொண்டு திருப்பலியில் கலந்துகொள்ளக்கூடிய அதிகபட்ச எண்ணிக்கை மற்றும் அதன்படி திருப்பலி எண்ணிக்கை திருப்பலி நேர அட்டவணை ஆகியவை மறுசீரமைப்புச் செய்ய வேண்டியிருக்கும்.

ஞாயிறு திருப்பலியை நடாத்த அரசாங்கம் வழங்கும் அனுமதி எத்தகையதொன்றாக இருக்கும் என்பதை அறிந்துகொள்ள நாங்கள் ஆவலோடு இருக்கின்றோம். மக்களை ஒன்று திரட்ட வேண்டிய அனுமதியை அரசிடமிருந்து வெகு விரைவில் பெற்றுக்கொள்ள முயற்சி செய்கின்றோம். அவ்வாறு அனுமதி கிடைக்கப் பெற்றாலும் கொவிட் -19 தொற்று நோய்க்கு இன்னும் மருந்து கண்டுப்பிடிக்கப்படாமையால் சுகாதார திணைக்களம் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமான சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றி திருப்பலி நடாத்த ஆவண செய்ய முயற்சி செய்கின்றோம். கீழே தரப்பட்டுள்ள விடயங்களில் கவனத்தை செலுத்திடுவோம்.

1. வாரம் முழுவதும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலி-களில் குறைந்தப்பட்சம் ஒரு திருப்பலியிலாவது கலந்துக்கொண்டு ஞாயிறு திருப்பலி கடனை மற்றும் தேவையை பூர்த்திச்செய்ய செயற்படுமாறு மக்களுக்கு அறிவுறுத்துகிறேன்.

2. பங்குத் தந்தையர்கள் தங்கள் மக்களுக்கு இலகுவான முறையில் வட்டார ரீதியில் பங்கை பிரித்து வாரம் முழுவதும் திருப்பலி நடாத்தவும், அவ்வாறு இயன்றளவு பங்குபற்றும் மக்களை கிரமமாக முகாமைத்துவம் செய்யக்கூடிய எண்ணிக்கையில் முகக்கவசம் அணிந்து நபர்களுக்கு இடையே சமூக இடைவெளியை பேணுதல் போன்ற விடயங்கள் பற்றி சுகாதார அதிகாரிகள் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டவேண்டும். திவ்விய நற்கருணையை பெற்றுக் கொள்ளும்போது மட்டும் முக கவசத்தை அகற்றி மீண்டும் அணிந்துக்கொள்ள வேண்டும்.

3. ஆலயத்திற்குள் செல்லும்போதும் வெளியே வரும்-போதும் கை கழுவுதல், கைகளில் கிருமி நாசினி பூசுதல் மற்றும் ஆலயத்தின் வெளியே அதற்கு வேண்டிய வசதிகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானதாகும்.

4. அனைத்து மறைப்பாடசாலைகளையும் மீண்டும் ஆரம்பிக்க அறிவித்தல் வரும்வரையில் மறைப்பாடசாலை நடைபெறாது. எமது மாணவ மாணவிகளுக்கு அந்த ஆன்மீக கல்வியை வழங்க இணையதளத்தினூடாக மேற்க்கொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளைப்பற்றி எமது கவனத்தை செலுத்துவோம்.

5. தனிப்பட்ட ரீதியில் செபிப்பதற்காக வருகின்றவர்களுக்காக ஆலயங்களை திறந்து வைத்திருக்க வேண்டும்.

**ஆ) திவ்விய நற்கருணையை பெற்றுக் கொள்ளுதல் :**

திவ்விய நற்கருணையை பெற்றுக் கொள்ளும்போது கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுவது முக்கியமானதாகும்.

இந்த தொற்று நோய் முழுமையாக அகன்று போகும்வரை மறைமாவட்ட ரீதியில் ஒழுங்கு செய்யப்படும் வழிபாடுகளை தவிர்த்து, பங்கு ரீதியில் கூட்டுத் திருப்பலி (Concelebrations) நடாத்துவதை தவிர்க்க வேண்டும்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# கொழும்பு உயர்மறைமாவட்ட ஒய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகையின் இறுதி பயணம்





## கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் பேசிய போது....



இலங்கையில் மட்டுமல்ல உரோமையில் உயர் கல்வி பெற்று இறையியல் அறிஞராக திருத்தந்தையின் நிழலில் கழித்த சீடத்துவ வாழ்வால் சமகால குருமட மாணவர்களோடு பழகியதால் பெற்றுக்-கொண்ட திருச்சபையின் பரந்த நோக்கினூடாக அதிமேதகு நிக்கலஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகை அவர்கள் இலங்கை திருச்சபைக்கு ஆற்றிய பணி அளப்பரியது

மிகவும் உறுதியான எளிய வாழ்வு வாழ்ந்த அவர் தேசிய கலாச்சாரத்தை மிகவும் அன்பு செய்தார். குருக்களை மிகவும் அன்பும் மதிப்பும் செலுத்திய அதிமேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகை குருக்கள் மற்றும் ஆயர்கள் எங்களுக்கு இந்நாட்டு கத்தோலிக்க மக்களுக்கும் ஆற்றிய பணியை ஒருபோதும் மறக்க முடியாது

இலங்கை ஆயர் பேரவையின் தலைவர் மேதகு வின்சென்ட் பர்னாந்து மற்றும் கண்டி ஆயர் மேதகு வியானி பர்னாந்து உடன் இணைந்து கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதி மேதகு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலியின் பின்னர் இறுதி வழிபாடானது ஒய்வு பெற்ற ஓஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகையினால் நடத்தப்பட்டதோடு அடக்க ஆராதனை குருநாகல் மறைமாவட்ட ஆயர் ஹெரல்ட் அன்டனி பெரேரா தலைமையிலும் நடைப்பெற்றது.

அதிமேதகு நிக்கலஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகையின் உடல் நீர்கொழும்பு புனித மரியாள் பேராயலத்தில் வலது பக்கம் தூய வளனாரின் திருச்சுரூபம் முன்றலில் அடக்கம் செய்யப்பட்டது.

நாட்டில் நிலவுகின்ற கொரோன தொற்று நோய் காரணமாக நல்லடக்க ஆராதனை தனிப்பட்ட ஆராதனையாக சில குருக்கள் மற்றும் குடும்பத்தாரின் பங்கேற்பில் இடம் பெற்றது.



## அருட்பணி. ஐவன் பெரேரா அடிகளார் பேசிய போது....



அதிமேதகு நிக்கலஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகை அவர்களே நீங்கள் அன்பான கருணையோடு போலியற்ற மகிமையான உங்கள் கனிவான அந்த பார்வை இன்றோடு நிறைவு பெறுகின்றது. கொழும்பு உயர்மறைமா-வட்டத்தில் மற்றும் முழு இலங்கையும் உங்கள் ஆழமான அன்பை அனுபவித்து நட்புடன் நடத்தப்பட்ட உங்கள் முன்மாதிரிகையால் போஷிக்கப்பட்ட குருக்களாகிய எமக்கு துறவியர்களுக்கும் பொதுநிலையினர்களுக்கும் தற்போது மிகுதியாக இருப்பது நல்ல பயணம் என்று சொல்வது மட்டுமே.

உங்களுக்கு இது ஓர் நல்ல பயணம் இன்று நாம் உம்மை வாழ்த்துவதோடு இதயத்தின் ஆழத்தில் இருந்து எழுகின்ற ஒருசில விடயங்களை சொல்லாமல் இருக்க முடியாது. உங்களுக்கு செவிமெடுத்த நாங்கள் தற்போது கொஞ்சம் பேச முயற்சி செய்கிறேன் தந்தையே.

நம்பிக்கையோடு உங்களோடு பலர் பகிர்ந்துக் கொண்ட பல விடயங்கள் உங்களோடு சேர்ந்து புதைக்கப்பட போகிறது. நாங்களும் உங்களைப்போல அடுத்தவர்கள் எம்மோடு பகிர்ந்துக் கொண்ட விடயங்களை யாரிடமும் சொல்லாமல் இருக்க முயற்சி செய்கின்றோம். உங்களை போல பிரச்சனைகள் மத்தியில் உண்மை பேசும் இறைவாக்கினார்களாக வாழ முயற்சி செய்கின்றோம்

88 ஆண்டு கால வாழ்வில் 60 ஆண்டுகள் குருவாக 25 ஆண்டுகள் பேராயராக பணியாற்றிய நீங்கள் திருவிவிலியத்தில் மீக்கா இறைவாக்கினர் கூறுவது போல நீதியை நிலை நாட்டவும், பரிவன்பை காட்டவும், இறைவனுக்கு கீழ்ப்படிந்து, அவரோடு பயணித்து உம்மை அர்ப்பணமானீர்

சுய விருப்பத்தோடு இயேசு சிலுவையில் பலியான பெரிய வெள்ளியன்று உயிர்த்தெழும் நம்பிக்கையோடு இவ்வுலகில் இருந்து விடை பெற்று விண்ணுலகம் சென்ற நீங்கள் இறைவனில் நம்பிக்கை கொண்டு இறந்து போன அனைத்து விசுவாசிகளோடு சேர்ந்து அவரின் திருமுக ஒளி தரிசனத்தை பெற்றுள்ளீரகள்.

எங்களை பற்றி இறைவனிடம் பேசி இருப்பீர்கள். தற்போது ஆண்டவர் முன்னிலையில் எளிய எங்களுக்காக வல்லமையுள்ள பரிந்து பேசுபவராக இருந்தருளும்.

அன்பு தந்தையே உயிர்த்த யேசுவின் நிலைவாழ்வு கிடைப்பதாக!






நோளன் பீரிஸ் ஆண்டு , 07. பு. ஆசீர்.கல்லூரி



K. தருஷி கிறிஸ்டினா, 04. பங்கு. மத்துகமை.



வென்சஸ் பர்னாந்து தரம் 8 பு. ஆசீர்வாதப்பர் கல்லூரி.



T. ஹொபின், தரம் 04, நியுசெட்டல், ஹொரணை.

**ஞான ஒளி**
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

# மறைக் கல்வி அறிவோம்

## மரியாள்



**05. மரியாள் பாவமற்றவளாக அமல உற்பவம் பெற்றவள் என்பதன்பொருள் என்ன?**

- மரியன்னை தன் தாயின் வயிற்றில் உற்பவமான வேளையிலிருந்தே அவருக்கு இறைவன் அளித்த விசேட வரத்தினால் சென்ம பாவக் கறையிலிருந்து அவள் பாதுகாக்கப்பட்டாள் என்பதையே இது குறிக்கிறது.

**06. என்றுமே கன்னியாக இருந்தாள் என்பதன் பொருள் என்ன?**

- மரியாள் இறக்கும்வரை கன்னியாகவே இருந்தாள் என்பதாகும்.

**07) மரியாள் இறையருளால் நிறைவுற்றவர் என்றும் அனைத்து பாவங்களினின்றும் விலக்கப்பட்டவள் என்றும் சொல்வது ஏன்?**


- மரியாள் இறைவனுக்குமிக நெருக்கமாக இருந்தாள்
- பாவத்தை விட்டு விலகி பரிசுத்தமானவளாக இருந்தாள்.
- இறைவனிடம் இருந்து தான் பெற்ற எல்லா அருட்கொடைகளையும் இழக்காமல் இருந்தாள்
- அவ்வருட் கொடைகள் பெருகிக் கொண்டே இருந்தது.

**08) மரியாள் ஆன்மாவுடனும், உடலுடனும் விண்நோக்கிச் சென்றாள் என்பதன் பொருள் என்ன?**

- இவ்வுலகில் தாம் வாழ்ந்த காலத்தின் முடிவில் அன்னை மரியாள் தம் ஆன்மாவுடனும், உடலுடனும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளகப்பட்டாள் என்பதே இதன் பொருளாகும். இதனை 'விண்ணேற்பு' என்று அழைக்கின்றோம்.

**ஆனி மாதம் 10ம் திகதிக்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள ஞான ஒளி முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்.**
பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.

# சிறுவர்களுக்கான விவிலியக் கதை



**அன்புத் தம்பிகளே! தங்கைகளே!**

நீங்கள் ஒவ்வொருவரும் உங்களது முன்மாதிரியாக ஒருவரை (றோல் மொடல்களாக) மனதில் வைத்திருப்பீர்கள். அவர்களது நடை, உடை,பாவனை பேச்சு எல்லாம் உங்களுக்கு முன்மாதிரியாக இருக்கும். உங்களைப் போன்ற சிறுவதில் மிகப்பெரிய பொறுப்புக்கு வந்து வயதிற்கு மீறிய அறிவுத் திறனோடு ஆட்சி செய்த ஒரு சிறுவனை உங்களுக்கு முன்மாதிரியான ஒரு சிறுவனை அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

நாட்டை ஆண்ட அரசன் தீயவழிகளில் நடந்து குடிமக்களை துன்பத்திற்கும் கஸ்டத்திற்கும் உள்ளாக்கினார். தீய வழிகளில் நடந்த அரசனை அவனது ஊழியர்களே கொன்று அதாவது 8 வயது மகனை அரசனாக்கினார்கள். விளையாட்டுப் பிள்ளையாக இருந்த சிறுவன் சிம்மாசனத்தில் அமர்ந்ததும் வெகு நேர்த்தியாக விவேகத்துடன் ஆளத்தொடங்கி, அவனது தந்தையும் மூதாதையர்களும் கடவுளுக்கும் தேவாலயங்களுக்கும்செய்த அநியாயங்களுக்கு பரிகாரம் தேடத் தொடங்கினான். பிறரிடம் இருந்த அந்நகரக் கோயிலின் சொத்துக்களை கணக்கெடுத்து, தகுதியான நபர்களை நியமித்து வருமானத்தைப் பெருக்கி கோவிலைப் புதுப்பொலிவுடன் அழகுபடுத்தி, வெகு விமரிசையாக கோயில் திருவிழாவைக் கொண்டாடி, கடவுளின் கோபத்தைத் தணிக்க முயன்றான். நம்மூர் ஆலயத் திருவிழாக்களில் நீங்கள் எல்லாம் பங்கெடுத்திருப்பீர்கள். இந்தச் சிறுவயது அரசன், அதுவர யாருமே கொண்டாடாத வகையில் கடவுளுக்குத்திருவிழா எடுத்து வெகு சிறப்பாகக் கொண்டாடி அந்தக் கோயிலின் புகழை உயர்த்தினான். நாட்டில் உள்ள மற்றத் தெய்வங்களின் ஆலயங்களை எல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கினான்.

கடவுள் தந்த திருச்சட்டத்தின்படி அவரைப்போல் வாழ்ந்து அரசாண்டவர் இதற்குமுன் எவரும் இருந்ததில்லை. இனி இருக்கப்போவதுமில்லை என்று பைபிள் கூறுமளவுக்கு சிறப்பாக அரசாண்டான் அந்தச் சிறுவன்.

அவனைப் போல் நீங்களும் உங்களின் ஆலயத்திருவிழாக்கள் ஆலயப் பணிகள் அனைத்திலும் பங்கெடுத்து சிறப்பிக்க அச்சிறுவனையே உங்கள் றோல் மொடலாக ஏற்றுக்கொளளுங்கள்.

தன் தந்தை செய்த தவறுகளுக்குப் பரிகாரம்செய்து ஆலயத்திருவிழாவைக் கொண்டாடிய குழந்தை அரசர் யார் என்று அறிய உங்கள் விவிலியத்தில் 2 அரசர்கள் புத்தகத்தில் 23ஆம் அதிகாரத்தைப் படித்துப் பாருங்கள்.

கலாபூசனம் புலவர் A.W.அரியநாயகம் JP.
லில்லி நல்வாழ்வு இல்லம்
இல. 15 யாழ் – பருத்தித்துறை வீதயாழ்/கோப்பாய், தெற்கு கோப்பாய்.




# விவிலிய பகுதி



## நற்செய்தி : புனித மாற்கு அதிகாரங்கள் – 11

208. 'என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறைவேண்டலின் வீடு' என்று எதில் எழுதப்பட்டுள்ளது?
209. 'ரபி அதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப் போயிற்று' என இயேசுவிடம் கூறியவர் யார்?
210. வேண்டுதல் செய்ய நிற்கும்போது யார் மேலாவது மனத்தாங்கள் கொண்டிருந்தால் செய்ய வேண்டியது என்ன?
211. எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்? என இயேசுவிடம் கேள்விகளை எழுப்பியவர்கள் யார்?
212. மக்கள் அனைவரும் இறைவாக்கினராக கருதிய நபர் யார்?
213. 'பிழிவுக்குழி' பொருள் என்ன?
214. திராட்சை தோட்ட உரிமையாளர் உவமைக்கு ஏற்ற மறைநூல் வாக்கு என்ன?
215. இயேசுவை பேச்சில் சிக்க வைக்க யாரை அனுப்பினார்கள்?
216. தெனாரியம் என்பது என்ன?
217. நாணயத்தில் பொறிக்கப்பட்டிருந்த உருவமும் எழுத்தும் யாருடையவை?

15ம் பக்கம் தொடர்ச்சி

## பாஸ்கு குண்டு வெடிப்பின் நினைவு கூரும் முகமாக,

# அருட்தந்தை சிறில் காமினி பர்னாந்து அடிகளாருடன் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பில்,...



பாஸ்கு குண்டு வெடிப்பின் நினைவு கூரும் முகமாக, நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டு புனித செபஸ்தியார் தேவாலய மண்டபத்தில் இடம்பெற்ற கத்தோலிக்க அருட்பணியாளர் சங்கம், குரண பங்கின் அருட்தந்தை சிறில் காமினி பர்னாந்து அடிகளாருடன் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பில், பலர் தத்தமது வேதனையான கருத்துக்களை முன்வைத்தனர்.

### அருட்பணி சிறில்காமினி பர்னாந்து தமது கருத்தில்,



பாஸ்கு குண்டுதாக்குதல் நடந்து ஒருவருடம் கடந்த போதும், இறந்தவர்கள், படுகாயமடைந்தவர்கள். வாழ்நாள் முழுவதும் மாற்றுத் திறனாளிகளாக மாறியவர்களான எமது மக்களுக்கு நீதி-நியாயம் கிடைக்கவில்லை. ஒருவருட காலமாக பலமுறை ஊடக சந்திப்புகளை நடத்தி நீதி கேட்டோம். ஆனால் எமக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. இனியும் இவ்வாறான முறையில் நீதியைக் கேட்டு நிற்பது பலனற்றதாகும். இனியும் விசாரணை ஆணைக்குழுவின் பின்னால் நீதியைக் கேட்டு அரசியல் அதிகாரிகளின் பின்னால் செல்லத்தேவையில்லை. ஆளும் தரப்பினருக்கும், பாஸ்கு குண்டு தாக்குதலுக்கு பதிலளிக்க வேண்டியவர்களுக்கும் உணர்த்தும் விதத்தில் செயல்பட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. தற்போது எமது நாட்டில் பரவியுள்ள கொரோனா கொள்ளை நோய் தொற்று முடிவுக்கு வந்தவுடன் இதற்கு ஒரு தீர்மானம் எடுப்போம்.

### கட்டுவபிட்டி புனித செபஸ்தியார் தேவாலய பங்குதந்தை ஜூட் நிரோஷன் அடிகளார் தமது கருத்தில்,



எமது தேவாலயத்தில் பாஸ்கு ஞாயிறில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலினால் பாதிக்கப்பட்ட 381 குடும்பங்கள். அதில் 260 குடும்பங்கள் கட்டுவாபிட்டி விரதேசத்தில் உள்ளவர்கள். 121 குடும்பங்கள் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் பாதிக்கப்பட்டவர்களாகும். இந்த கொடூரத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் ஒருவருட காலமாக குரலெழுப்பியும் அவர்களுக்கான நீதி கிடைக்காதிருந்தும் பொறுமையுடன் காத்திருந்தனர். கொழும்புகத்தோலிக்க திருச்சபை பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை தேடி பார்த்து உதவி செய்வதுடன் அவர்களுக்கு அரசாங்கத்தினால் செய்ய வேண்டியவை சரியாக நடைபெறாததை குறித்து கவலையடைகிறது.

### கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல பரிபாலகரான அருட்பணி ஜூட் ராஜ் அடிகளார்



தமது இதய குமுறலை வார்த்தைகளில் வடித்தபோது, தாக்குதல் நடந்து ஒருவருடம் முடிந்து விட்டது. எமது கண்களைத் திறந்து விட்டு,தமது கண்களை மூடிய எமது மக்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடகூட முடியாது போய்விட்டது. குண்டு தாக்குதலுக்கு பொறுப்பு கூறவேண்டியவர்கள் பணத்தினாலும், அதிகாரத்தினாலும், அரசியல் செல்வாக்கினாலும் சுதந்திரமாக இருக்கிறார்கள். ஆளும் தரப்பினர் எம்மை ஆசுவாசப்படுத்த காலத்துக்கு காலம் பல கதைகளைக் கூறுகிறார்கள். நாம் இவர்கள் அனைவரையும் சந்தேகிக்கிறோம். எம்மை ஏமாற்றி ஆசுவாசப்படுத்த யார் முயன்றாலும், இறைவன் என்றாவது ஒருநாள் நீதியைத் தருவார் என நம்புகிறோம்.

### திருமதி. அனுஷா குமாரி அவர்கள்



கட்டுவாபிட்டி தேவாலய குண்டு வெடிப்பில் தனது கணவன், பிள்ளையை இழந்த அவரின் இதய குமுறல், எனது குடும்ப வாழ்க்கை அழகாக இருந்தது. ஆனால் இன்று நான் ஒரு மனைவியாக, அம்மாவாக நடைபிணமாக வாழ்கிறேன். ‘அன்று இந்த அனர்த்தம் நடக்கவிடாமல் தடுத்திருந்தால்...’ என்று நினைக்கும்போது வார்த்தைகளில் விபரிக்க முடியாத வேதனை ஏற்படுகிறது. இந்த தாக்குதலுக்கு காரணமானவர்களை என் முன் நிறுத்தி தூக்கு தண்டனை கொடுத்தாலும் அது போதுமானதாகாது. அவர்கள் அனைவரும் தண்டனை பெறவேண்டும். அவர்களால் மீண்டுமொரு அழிவு ஏற்படக் கூடாது. அவர்கள் அனைவரும் நீதியின் முன் தண்டிக்கப்பட வேண்டும். எமதுகர்த்தரின் ஆண்டகையின் உதவியினாலேயே நாம் இன்றும் உயிர்வாழ்கிறோம். இந்த அனர்த்தத்தை தேர்தல் பிரச்சாரத்தில் வாக்குகளை குவிக்க பயன்படுத்தாமல், தண்டனை கொடுக்குமாறு இந்நாட்டு ஆளும் தரப்பினர்களிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

**“அன்று இந்த அனர்த்தம் நடக்கவிடாமல் தடுத்திருந்தால்...”**

### கொழும்பு கொச்சிக்கடை குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட திரு. சிறிமான்ன அவர்கள்



தனது உள்ளக்கிடங்கை கொட்டியபோது, நான் பிறப்பிலேயே பௌத்தனாகும். ஆனாலும் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு எமது குடும்பத்தினர் அடிக்கடி செல்வது வழக்கம். அன்றும் இதேபோல் எனது 22 வயது மகளும், 19 வயது மகனும் தேவாலயத்திற்குச் சென்றார்கள். ஆனால் இன்னும் அவர்கள் திரும்பி வரவேயில்லை. நானும் எமது மனைவியும் கண்ணீருடன் மிகுதி காலத்தைக் கழிக்கிறோம். எனது குடும்பத்திற்கு நடந்த அநியாயத்திற்கு வழக்கு தொடுத்தேன். இந்த உலகில் எந்த நீதிமன்றத்திலும் எனக்கு நீதி கிடைக்காது என எனக்குத் தெரியும். நீதி கிடைக்குமென்றால் எனது பிள்ளைகள் மீண்டும் எனக்குக் கிடைப்பார்கள். வழக்கு பலனற்றதாக செல்கிறது. வழக்கறிஞர்கள் காலம் வீண்விரயமாகிறது என்கின்றனர்.

இந்தியாவிலிருந்து உளவுதுறை குண்டு வெடிக்கப்போகும் காலம், நேரம், இடம் பற்றி கூறியிருந்தும் ஆட்சியாளர்கள் எந்த பாதுகாப்பு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இந்நாட்டு மக்களை செல்லாகாசாக கருதினார்கள்.

இந்நாட்டு முஸ்லிம் அரசியல்வாதிகள் இத்தாக்குதல் பற்றி நன்றாக அறிந்திருந்தார்கள். ஆனால் சிங்கள ஆளும் தரப்பினருக்கு ‘முஸ்லிம்களின் வாக்கு தேவைப்பட்டதால்’ நடக்க விருந்த அழிவைப் பற்றி அக்கறைகொள்ளவில்லை. அன்றைய ஆளும் தரப்பினர் எமது மக்களை கொல்ல இடமளித்தனர் என்பதைவிட, அவர்கள் கொன்றார்கள் என்று கூறுவதே பொருந்தும்.

இந்த அநியாயத்தை செய்தவர்கள் மாத்திரமல்ல. உடந்தையாக இருந்தவர்கள், உயர் அதிகரத்தில் இருப்பவர்களும் பொறுப்பு கூற வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழுல் விசாரித்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். தற்போதைய ஜனாதிபதி நியாயத்தைப் பெற்றுத் தருவார் என சிறிதளவு நம்பிக்கை பிறந்துள்ளது. இது முழுமையாக வேண்டும்.

கொழும்புகொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் பரிபாலகத் அருட்பணி ஜூட் பர்னாந்து அடிகளார், நீர்கொழும்பு கட்டுவாபிட்டி புனித செபஸ்தியார் தேவாலய பங்குதந்தை ஜூட் நிரோஷன் அடிகளார், மேலும் கட்டான, போலவலான, நீர்கொழும்பு வட்டார அருட்தந்தையர்களும் பாதிக்கப்பட்ட பொது நிலையினர் சிலரும் இந்த ஊடக சந்திப்பில் இணைந்துக் கொண்டனர்.

**தகவல் மற்றும் படங்கள்**
**திரு. T. சுனில்**

# போதகரே, சாகப் போகிறோமே, உமக்கு கவலையில்லையா?!

தமிழாக்கம்: அருட்பணி கிளேறியன் பர்னாந்து அடிகளார்.

**இவ்வுலகம் எதிர்பாராத கொவிட் -19 கொள்ளை நோயில் சிக்கிக் கொண்டுள்ள இத் தருணத்தில், இதிலிருந்து பாதுகாக்கப்பட கடந்த பங்குனி மாதம் 27ம் திகதி வெள்ளிக்கிழமை, வத்திக்கான் பேதுரு சதுக்கத்தில் திருத்தந்தை பிரன்சிஸ் அவர்களால் ஊருக்கும் உலகுக்கும் வழங்கிய மறையுரையின் தமிழாக்கம்.**



'அன்றொரு நாள் மாலை நேரம்' (புனித மாற் 4:35) நாம் செவிமடுத்த நற்செய்தி வாசகம் இவ்வாறு ஆரம்பிக்கிறது. **பல வாரங்களாக எமக்கும் மாலையாகவே இருக்கிறது. நம்முடைய முற்றங்களை, நம்முடைய வீதிகளை, நம்முடைய நகரங்களை காரிருள் கைப்பற்றியுள்ளது. இந்த இருள் ஒரு ஆரவாரமிக்க அமைதியை வேதனையான ஒரு வெறுமையை எம் வாழ்வில் நிரப்புகிறது. இவ்விருள் கடந்து செல்லும் அனைத்தையும் அசைவற்றதாக மாற்றுகிறது. இதனை நாம் காற்றின் வீச்சில் உணர்கின்றோம். மக்களின் அசைவில் உணர்கிறோம். அவர்களின் பார்வையிலேயே சந்திக்கின்றோம். நற்செய்தியில் வருகின்ற சீடர்களைப் போல, ஒரு எதிர்பாராத புயலினால் நாம் சூழப்பட்டுள்ளோம். நாமும் அதே படகில் திசையறியாது பலமிழந்து இருப்பதாக உணர்ந்தோம். ஆனால் அதேவேளை நாமனைவரும் மிக முக்கியமானவர்கள், அவசியமானவர்கள் என்றும், நாமனைவரும் ஒன்றாக படகை செலுத்த வேண்டும் என்றும், ஒவ்வொருவருக்கும் பரஸ்பர ஆறுதல் தேவைப்படுகிறது என்றும், உணர்ந்திருக்கின்றோம். ஆண்டவருடைய சீடர்களைப் போல, அங்கலாய்ப்போடு ஒரே குரலில் சாகப்போகிறோமே என்று நாமும் சொல்லுகின்றோம்.**

எம்மை இந்த சந்தர்ப்பத்தோடு இணைத்துப் பார்ப்பது இலகுவாக உள்ளது. ஆனால் இயேசுவின் மனப்பான்மையை புரிந்துக்கொள்ளக் கடினமாக உள்ளது. அவருடைய சீடர்கள் அமைதியிழந்து நம்பிக்கை இழந்த நிலையில், இயேசு விண்ணகத் தந்தையின் மீதான முழு நம்பிக்கையில் மூழ்கும் படகின் பிற்பகுதியில் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கின்றார். இது நற்செய்தியில் இயேசு உறங்குவதாகக் குறிப்பிடப்படுகின்ற ஒரே சந்தர்ப்பமாகும். அவர் விழித்தெழுந்து காற்றையும் கடலையும் அடக்கியப் பின் சீடர்களை நோக்கி **ஏன் அஞ்சுகின்றீர்கள். உங்களுக்கு விசுவாசம் இல்லையா?** என்று கண்டிக்கும் தொனியில் கேட்கின்றார். (புனித மாற்கு 4:40)

நாம் இதனை சற்று விளங்கிக் கொள்ள முற்படுவோம். ஒரு விதத்தில் இயேசுவின் நம்பிக்கையோடு ஒப்பிடும் போது, சீடர்களின் விசுவாசம் தளர்ச்சியடைந்து காணப்படுகிறது? அவர்கள் அவரை நம்புவதை நிறுத்தியிருக்கவில்லை, அவரையே உதவிக்கும் அழைத்தார்கள். ஆனாலும் அவர்கள் இயேசுவை அழைத்த விதத்தில் விசுவாசக் குறைவை காண்கின்றோம். **போதகரே, சாகப் போகிறோமே உமக்கு கவலையில்லையா?** (புனித மாற்கு 4:38) இயேசுவுக்கு அவர்கள் மீது ஈடுபாடும், அக்கரையும் இல்லை என்று எண்ணினார்கள். நம்மையும் நம்முடைய குடும்பங்களையும் அதிகமாக வேதனைப்பட வைக்கும் விடயம் என்னவென்றால், **உங்களுக்கு என்மீது அக்கரையில்லையா?** என வினவப்படும் கேள்வியாகும். இக்கேள்வி நம் மனதைக் காயப்படுத்தி , மனதில் ஒரு கொந்தளிப்பையே உண்டுப்பண்ணக் கூடியது. இதே கேள்வி இயேசுவையும் மனதளவில் பாதித்திருக்கலாம். ஏனென்றால் அவர் எல்லோரையும் விட நம்மைக் குறித்து அதிகமாக அக்கறை கொண்டிருக்கின்றார். உண்மையில் சீடர்கள் அவருடைய உதவியை நாடிய உடனேயே அவர்களுடைய மனச்சோர்விலிருந்து அவர்களை மீட்டார். இப்புயல் நாம் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்கள் என்பதை வெளிக்கொணர்கிறது. நம்முடைய அன்றாட பழக்க வழக்கங்கள், செயல்திட்டங்கள், செயற்பாடுகள் முதலிடம் கொடுக்கப்படுபவை என்பன கட்டப்பட்டுள்ள அடித்தளங்கள் பொய்யானவை ஆழமற்றவை என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது. எமது வாழ்வையும் எமது சமூகத்தின் வாழ்வையும் வளமாக்கி உறுதிப்படுத்தி ஊக்கமளிக்கின்றவற்றை நாம் எவ்வாறு கைவிட்டு விட்டோம் என்பதை இந்த புயல் எமக்கு காட்டுகின்றது. இந்த புயல் மக்களின் ஆன்மாவை வளப்படுத்துகின்ற எல்லாவற்றையும் மழுங்கடிக்கும் எண்ணங்களை வெளிகொணர்ந்தது. இப்புயலானது எம்மவர்களை தொடமுடியாத எம் மூதாதையர் பற்றிய நினைவுகளை மீட்டுப்பார்க்க முடியாத மீட்கக்கூடியவை என்னும் போலியான வலி நிவாரண முயற்சிகளை வெளிக்கொணர்ந்துள்ளது. இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ள தேவையான எதிர்ப்பு விசை இல்லாதவர்களாக எம்மை எமது எண்ணங்களும் முயற்சிகளும் உருமாற்றியுள்ளது என்பதை இப்புயல் நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

நாம் நமது புறத்தோற்றம் குறித்து எப்போதும் கவலை கொண்டிருந்தோம். நமது அகத்தை சில மாய தோற்றங்களால் மறைத்து போலியாக முகங்களை வெளிப்படுத்தினோம். இவையெல்லாம் இப்புயலில் அமிழ்ந்துவிட்டன. மீண்டுமாக நாம் எமது பொதுவான பேறுபெற்ற சகோதர சகோதரிகள் நம் அடையாளத்தை கண்டடைந் துள்ளோம்.**ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?**' ஆண்டவரே! இம்மாலை வேளையில் உமது வார்த்தை எமது மனங்களை தட்டி எழுப்புகின்றன. எம்மை விட நீர் அன்பு செய்யும் இவ்வுலகில் எல்லாம் செய்ய எமக்கு ஆற்றலுண்டு எனும் எண்ணத்தில் துரிதகதியில் அதிக தூரம் முன்னேறி சென்றிருக்கின்றோம். இலாப மீட்டும் பேராசையினால் பொருட்சேகரிப்பில் மூழ்கிப் போனோம். பரப்பரப்பான வாழ்வில்குழம்பிப் போனோம். உம்முடைய கண்டித்தலைக் கேட்டும் நாம் நிறுத்தவில்லை. உலகிலுள்ள அநீதிகளையும் போர்களையும் கண்டும் நாம் விழித்துக்கொள்ளவில்லை. நோயுற்ற உலகின் அங்கலாய்பிற்கோ ஏழைகளின் அழுகுரலுக்கோ நாம் செவிசாய்க்க வில்லை. நோயுற்றிருக்கும் உலகில் நாம் மட்டும் நலமோடு வாழலாம் என்ற எண்ணத்தில் முன்னேறிச் சென்றுக் கொண்டிருக்கிறோம். இப்போது நாம் கொந்த ளிக்கும் கடலில் தத் தளிக்கின்றோம். உம்மை நோக்கிப் பெருமூச்சு விடுகின் றோம். ஆண்டவரே விழித்தெழும்.

**ஏன் அஞ்சுகின்றீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?** ஆண்டவரே, நீர் எம்மை நிறை விசுவாசத்திற்கு அழைக்கின்றீர். இவ்விசுவாசம் நீர் இருக்கின்றீர் என்பதிலல்ல மாறாக உம்மிடம் நம்பிக்கையோடு வருவதில் வெளிப்படுகிறது. இத்த-வக்காலத்தல் உமது அழைப்பு அவசரமாக எம்மில் எதிரொலிக்கிறது. **மனந்திரும்புங்கள்! உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்"** (யோவேல் 2:12)

இச்சோதனை காலத்தை ஒரு தெரிவுசெய்தலின் நேரமாக பற்றிக்கொள்ள நீர் எம்மை அழைக்கிறீர். இது உம்முடைய தீர்ப்பின் நேரமல்ல மாறாக எம்முடைய தெரிவின் தருணம். அவசியமானவை எவை? கடந்து செல்பவை எவை? என்பதை தெரிவு செய்யும் நேரம்! தேவையானவை எவை தேவையற்றவை எவை என்பதை பிரித்துப் பார்க்கும் நேரம்!

ஆண்டவரே, உம்மட்டிலும் அடுத்தவர் மட்டிலும் எம் வாழ்வை சரியான பாதைக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான தருணம். இப்பயணத்திற்கு அச்சத்தின் மத்தியிலும் தமது வாழ்வை ஈந்த அநேகரை சிறந்த எடுத்துக்காட்டுகளாக கொள்ள முடியும். இதுவே தைரியமான, தரமான, தன்னிலை மறுத்து உருவெடுக்கும் தூய ஆவியின் ஆற்றல். தூய ஆவியாரால் தூண்டப்பட்ட வாழ்வே மீட்பளிக்க முடியும். தலைப்புச் செய்திகளில் வெளிவராத, பிரபல்யமான நிகழ்ச்சிகளின் அணிவகுப்பில் இடம்பெறாத, பொதுவாக மறக்கப்படுகின்ற சாதாரண மக்கள், எவ்வாறு எம் வாழ்வு பிண்ணப்படுகின்றது, வளமாக்கப்படுகின்றது என்பதை நிரூபிக்க முடியும். யாருமே மீட்பை தன்னந்தனியாக சுவைப்பதில்லை என்பதை புரிந்துக்கொண்ட பலர்:

மருத்துவர்கள், செவிலியர்கள், பலசரக்கு கடைகளில் பணிபுரிவோர், சுத்தம் செய்வோர், பராமரிபாளர்கள், போக்குவரத்து துறையினர், சட்டம் மற்றும் ஒருங்கிற்கு பொறுப்பானோர், தன்னார்வத் தொண்டர்கள், குருக்கள், துறவியர்கள், கன்னியர்கள் எவ்வித ஐயத்திற்குமிடமின்றி இந்நாட்களில் எம் காலத்தின் தீர்க்கமான நிகழ்வுகளை செய்து வருகின்றனர். எம் மக்களின் உண்மையான முன்னேற்றம் அளக்கப்படும் இப்பெரும் துயரத்தில் '**அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக** ' எனும் இயேசுவின் குருத்துவ செபத்தை அனுபவிக்கிறோம்.

எத்தனை மக்கள் ஒவ்வொரு நாளும் பொறுமையிழக்காமல் பதற்றத்தை தவிர்த்து சமூகப்பொறுப்பை விதைத்து, நம்பிக்கையை ஊட்டிக்கொண்டிருக்கிறார்கள்!. எத்தனை பெற்றோர், ஆசிரியர்கள் தமது சின்னஞ்சிறிய செயல்கள் மூலம் நமது பிள்ளைகளுக்கு எவ்வாறு கண்களை உயர்த்தி செபத்தில் வளம்பெற்று, இக்கட்டான சூழ்நிலைக்கு தமது நாளாந்த செயற்பாடுகளை மாற்றியமைப்பதன் மூலம் முகங்கொடுத்து தொடர்ந்து பயணிப்பது என்பதைக் குறித்து தெளிவு ஏற்படுத்தியிருக்கின்றார்கள்!. எத்தனை பேர் அனைவரின் நலனுக்காக பரிந்துரை செபம் ஒப்புக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! இந்நேரத்தில் செபமும் மௌனமான சேவையுமே நம் வெற்றியின் இரு ஆயுதங்களாக திகழ்கின்றன.

**ஏன் அஞ்சுகிறீர்கள்?** உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா? எம்மனைவருக்கும் மீட்பு தேவை என்பதை நாம் உணரும்போது விசுவாசம் ஆரம்பிக்கிறது. நமக்கு நாமே போதுமானவர்களல்ல. தனித்திருந்தால் நாம் மூழ்கிப்போவோம். முற்காலத்து கடலோடிகள் விண்மீன்களை நம்பியிருந்தது போல நாம் கடவுளை நம்பியிருக்கிறோம். நாம் இயேசுவை எம் வாழ்க்கை படகிற்கு வரவேற்போம். எமது பயங்களை அவருக்கு கையளிப்போம். ஏனெனில் அப்போது அவர் அவற்றை மேற்கொள்வார். இயேசு படகிலிருக்கும்போது நம் படகு ஒருபோதும் கவிழ்ந்து விடாது என்பதை சீடர்களைப் போல நாமும் அனுபவிப்போம். எமக்கு ஏற்படுகின்ற எல்லாவற்றையும் ஏன் தீமைகளைக் கூட நன்மையாக மாற்றக்கூடியது நம் கடவுளின் வல்லமையே. அவர் நம் பேரலைகளில் அமைதியை கொண்டு வருகின்றார். ஏனெனில் கடவுளோடு இருக்கும்போது வாழ்வு என்றும் இறப்பதில்லை.

இப்புயல் காற்றின் மத்தியில் எல்லாமே மூழ்கி விடுவது போல காட்சியளிக்கும் இத்தருணத்திற்கு அர்த்தத்தையும் ஆதரவையும் கொடுக்கக்கூடிய நம்பிக்கையும், ஒருமைப்பாட்டையும் தட்டியெழுப்ப, செயற்படுத்த எம் ஒவ்வொருவரையும் ஆண்டவர் அழைக்கிறார். எமது பாஸ்கா விசுவாசத்தை ஆண்டவர் புதுப்பிக்கின்றார். எமக்கு ஒரு நங்கூரம் உண்டு. அவருடைய சிலுவையில் நாம் மீட்கப்பட்டுள்ளோம். எமக்கு ஒரு சுக்கான் உண்டு. அவருடைய சிலுவையின் நிழலில் நாம் குணம்பெற்றுள்ளோம். இவ்வாறு எவருமே எதுவுமே ஆண்டவரின் மீட்பளிக்கும் அன்பிலிருந்து எம்மை பிரிக்க முடியாது. தனிமைப்படுத்தலுக்கு மத்தியில் அரவணைப்புகளும் அறிமுகங்களும் குறைந்த நிலையில் தாம் துன்புறுகின்றோம். பலவற்றின் பற்றாக்குறையை உணருகின்ற நாங்கள் அவர் உயிர்த்திருக்கிறார். எம்மோடு வாழ்கிறார் என்ற மீட்பளிக்கும் அறிவிற்பிற்கு மீண்டுமாக செவிமடுப்போம். எமக்காககாத்திருக்கின்ற வாழ்வை கண்டடைய நம்மை எதிர்பார்திருப்போரை பார்த்துக்கொள்ள எமக்குள் இருக்கும் அவரின் அருளைக் கண்டுகொள்ள, உற்சாகப்படுத்த, உறுதிப்படுத்த ஆண்டவர் தமது சிலுவையிலிருந்து எம்மை அழைத்து நிற்கின்றார். ஒருபோதும் அணையாத எரியும் திரியை அணைக்காதிருப்போம். அவரை நோக்க மீண்டும் தூண்டப்பட அனுமதிப்போம். ஆண்டவரின் சிலுவையை தழுவுதல் என்பது நிகழ்கால வேதனைகளையெல்லாம் தழுவிக்கொள்வதற்கான தைரியத்தை வரவழைத்துக்கொள்வதைக் குறிக்கும். அதிகாரம் மற்றும் செல்வத்திற்கான எம் பேராவலை சிறு நேரத்திற்கு கைவிடுவதை குறிக்கும். தூய ஆவியார் மட்டுமே எம்மில் தூண்டக்கூடிய புத்தாக்கத்திக்கு இடமளிப்பதைக் குறிக்கும். அவரது சிலுவையை தழுவுதல் என்பது எல்லோரும் அழைக்கப்பட்டவர்கள் என்று உணரக்கூடிய தளங்களை நிர்மாணிப்பதற்கான தைரியத்தைக் குறிக்கும். விருந்தோம்பல், சகோதரத்துவம் மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றின் புதிய வடிவங்களை அனுமதிப்பதற்கான மனநிலையை குறிக்கும். நம்பிக்கையை பற்றிக்கொள்ளவே அவரது சிலுவையினால் நாம் மீட்கப்பட்டுள்ளோம். அந்நம்பிக்கையாலே நாமும் மற்றவர்களும் பாதுகாப்போடு வாழ மேற்கொள்ளப்படுகின்ற எல்லா முயற்சிகளும் வாய்ப்புக்களும் உறுதிப்படுத்தப்படுவதாக. நம்பிக்கை பற்றிக்கொள்ள ஆண்டவரை தழுவிக்கொள்வோம். இதுவே தமது பயத்தை போக்கி நம்பிக்கையூட்டும் விசுவாசத்தின் வலிமையாக உள்ளது. '**ஏன் அஞ்சுகின்றீர்கள்?**' உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?

தொடர்ச்சி 15ம் பக்கம்

# பதுவை புனித அந்தோனியார்

## யூன் - 13 (1195 - 1231)



போர்த்துக்கல் நாட்டில் உள்ள லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி இவர் பிறந்தார். இவரது திருமுழுக்குப் பெயர் பெர்டினாண்ட். பிரபுக்கள் வம்சத்தில் தோன்றிய இவர் சிறுவயது முதல் ஏழைகள் மீது பரிவிரக்கம் கொண்டு தம் அன்னையிடம் மன்றாடி ஏராளமான ரொட்டிகளை பெற்று தினமும் ஏழைகளுக்கு உணவளித்து மகிழ்வார். செல்வாக்கும் தெய்வபயமும் கொண்ட இவரது பெற்றோர் லிஸ்பன் பேராலய திருத்தலம் அருகில் வாழ்ந்து வந்தனர். திருத்தலத்தின் பள்ளியில் கல்வி பயின்றார். 15வது வயதில் புனித வின்செனட் மடத்தில் புனித அகஸ்டின் மடத் துறவியானார். இரண்டு வருடங்களுக்குப் பின் கோயிம்பரா நகர் மடத்தில் சேர்ந்து 08 ஆண்டுகள் செபத்துடன் மறையறிவை கற்றுத் தேர்ந்தார். இறையருளால் எதையும் மிக நன்றாக விரைவில் புரிந்து கொள்ளும் திறனுடன் வியத்தகு நினைவாற்றலும் பெற்றிருந்ததால் பரிசுத்த வேதாகமம் மற்றும் மறைநூல் வல்லுனர்கள் எழுதியவைகளை ஆழமாக கற்றுத் தேர்ந்து இறையியல் ஞானம் நிறைந்த களஞ்சியமானார்.

1220இல் மொரோக்காவில் வேதம் போதித்து மறைசாட்சிகளான பிரான்சிஸ்கன் துறவிகள் திருவுடல்கள் போர்த்துக்கல் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டதை பார்த்த புனிதர் தானும் இயேசுவுக்காக மறைசாட்சியாக விரும்பினார். அவரது மடத்திற்கு உதவி கேட்டு வந்த பிரான்சிஸ்கன் சபையாரிடம் தம் ஆசையை வெளிப்படுத்தியதன் விளைவாக 1221இல் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்தார். அந்தோனி என்ற புதிய பெயரை தேர்ந்து கொண்டார். மொரோக்கா சென்று வேதம் போதிக்க அனுமதி பெற்றார். ஆனால் நோயின் நிமித்தம் ஐரோப்பா திரும்பினார். அப்போது கப்பல் திசை மாறி சிசிலியில் மெசினா நகர் சேர்ந்தது. அங்கிருந்து அசிசி நகர் சென்றடைந்தார். ஃபோர்லி என்ற இடத்தில் துறவியாக நியமிக்கப்பட்டார். இங்கு ஒரு குருப்பட்டவிழா நிகழ்ந்தது. டொமினிக்கன் மற்றும் பிரான்சிஸ்கன் துறவிகள் பங்கேற்றனர். ஏதோ தவறு நிகழ்ந்து விழாவில் மறையுரை ஆற்ற யாரும் தயாராக இல்லை. அந்தோனியார் தூய ஆவியானவரின் அருளால் மறையுரை ஆற்ற அழைக்கப்பட்டார். கூச்சத்துடன் இசைந்து மெதுவாகப் பயத்துடன் ஆரம்பித்து பின் மறைநூல் ஞானத்தை திறமையோடும் நாவன்மையுடனும் மிக அழகாக உரைநிகழ்த்தி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். சபைத் தலைவர் பெரிதும் மகிழ்ந்து லாம்பார்டி பகுதி முழுவதும் வேதம் போதிக்கவும் குருமடத்தில் இறையியல் பேராசியராகவும் நியமித்தார்.

1226 இல் புனித பிரான்சிஸ் அசிசியாரின் மறைவுக்குப் பின் இத்தாலிக்கு திரும்ப அழைக்கப்பட்டார். பயணத்தில் களைத்துப் போன புனிதரும் அவர் நண்பரும் ஒரு ஏழைப் பெண் வீட்டில் நுழைந்தனர். ரொட்டியும் திராட்சை இரசமும் அவர்களுக்குப் பரிமாறப்பட்டன. திராட்சை இரச பீப்பாய் குழாயை மூட அப்பெண் மறந்து விட்டதால் இரசம் முழுவதும் வீணாயிற்று புனிதருடைய நண்பரும் கண்ணாடிக் குவாளையை உடைத்துவிட்டார்.

புனிதர் செபித்ததால் உடைந்த குவளை புதுமையாக முழுதானது. திராட்சை இரச பீப்பாய் இரசத்தால் நிரம்பியது.

பேராசியராக அல்லாமல் நாவன்மை படைத்த மறைபோதகராகத்தான் புனிதர் ஏராளமான ஆன்மாக்களை அறுவடை செய்ய முடிந்தது. மரியன்னையிடம் மிக அதிக பக்தி, பற்று தொடர்பு கொண்டிருந்த புனிதர் தாழ்ச்சியோடு சேர்த்து அனைத்து நற்குணங்களையும் பெற்றிருந்தார். உரத்து ஒலிக்கும் தெளிந்த குரல் யாரையும் காந்தம்போல் ஈர்க்கும் முகத்தோற்றம், அபார ஞாபக சக்தி, ஆழமான அறிவு, மேலிருந்து அருளப்பட்ட தீர்க்க தரிசன ஆற்றல் அற்புதங்கள் நிகழ்த்தும் வியத்தகு கொடை புனிதரிடமிருந்து பரிசுத்த ஒளி வீசியது. புனிதரைக் கண்டவுடன் கடின இதயம் கொண்ட பாவிகளும் மண்டியிடுவர். இவர் செய்த புதுமைகள் நாத்திகரையும் விசுவாசம் குன்றியவர்களையும் மனம் திருப்பியது. புனிதர் கரங்களில் ஏந்தியிருந்த பரிசுத்த நற்கருணையை மண்டியிட்டு ஆராதிக்கும் வரை ஒரு கழுதை தம் முன் வைக்கப்பட்ட புல்லரிசி கூல் வகை உணவை 3 நாட்களாக உண்ண மறுத்து நோன்பிருந்தது. புனிதரை சோதித்து பார்க்க நஞ்சு கலந்த உணவை அவருக்கு அளித்தனர். தீர்க்க தரிசனமாகத் தெரிந்து கொண்ட புனிதர் சிலுவை வரைந்து உணவை தீங்கற்றதாய் உண்டார். புதுவையின் அருகில் பிரெண்டா ஆற்றங்கரையில் மறையுரையாற்றிய புனிதரை நீருக்குள் நெருங்கிய மீன்கள் உற்சாகத்துடன் துள்ளி எழுந்து மறையுரை கேட்டன. மறையுரை கேட்க மனமற்ற மக்கள் வெட்கப்படுமாறு புனிதர் இந்த அற்புதத்தை செய்தார்.

ஒரு பெரிய வியாழன் அன்று லிமோ ஜெஸ் நகரின் ஆலயத்தில் மறையுரையாற்றிக் கொண்டிருந்தபோது திடீரென வேறொரு இடத்தில் துறவியர் பாடற்குழுவில் பாடவேண்டியிருந்தது நினைவுக்கு வந்தது. அத்தருணத்தில் துறவியர் பாடகர் குழுவில் இரண்டாம் அவதாரமாகத் தோன்றி பாடிவிட்டு மீண்டும் ஆலயத்தில் மறையுரையைத் தொடர்ந்தார். மற்றொரு நாள் லிமோஜெஸ் ஆலய சதுக்கத்தில் மறையுரையாற்றிக் கொண்டிருந்தபோது புனிதர் மக்கள் கூட்டத்தை மழையில் நனையாமல் காப்பாற்றினார். வேறொரு ஆலயத்தில் மறையுயைாற்றும்போது "**பசாசின் தந்திரத்தால் மறையுரை மேடை உடைந்து விழும் ஆனால் அனைவரும் பாதுக்கப்படுவர்**" என்று தீர்க்க தரிசனம் கூறினார். சற்று நேரத்தில் மறையுரை மேடை உடைந்து தலைகீழாக விழுந்தது. யாரும் காயமடையவில்லை. ஆசீர்வாதப்பர் துறவியர் மடத்தில் ஒரு துறவிக்கு ஏற்பட்ட கடும் சோதனைகளிலிருந்து அற்புதமாக புனிதரால் விடுவிக்கப்பட்டார்.

பதுவையின் ஓர் இளைஞன் கோபத்தில் தன் தாயை உதைத்து விட்டான். மனம் வருந்தி புனிதரிடம் ஒப்புரவு அருட்சாதனத்தில் அறிக்கையிட்டான். தாயை உதைத்த கால் வெட்டியெறியப்பட வேண்டும் எனப் புனிதர் கூறி வீட்டுக்கு விரைந்த இளைஞன் காலை



வெட்டிப் போட்டுவிட்டான். தாயின் துயரமறிந்த புனிதர் அங்கு சென்று வெட்டப்பட்ட பகுதியை எடுத்து அற்புதமாக சேர்த்து காலை முழுதாக்கினார். ஒருமுறை ஒரு கந்துவட்டி வாங்குபவனின் மரணச்சடங்கில் மறையுரையாற்ற சென்ற புனிதர் **உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும்** என்ற இறைவார்த்தைகளை மையமாகக் கொண்டு மறையுரையாற்றினார். அப்போது "**இந்தப் பணக்காரன் இறந்து நரகத்தில் புதைக்கப்பட்டான். ஆனால் அவன் சேர்த்து வைத்த செல்வத்திடம் சென்று பாருங்கள் அங்கு இவனுடைய இதயம் காண்பீர்**" என்றார் இறந்தவரின் உறவினர் நண்பரும் ஆவலுடன் சென்று அவன் சேர்த்து வைத்திருந்த பணம் காசுகளின் நடுவே இன்னும் சூடுதனியாமல் இருக்கும் அவன் இதயத்தைக் கண்டு பெரிதும் வியப்படைந்தனர்.

ஒருமுறை புனிதர் மிகுந்த களைப்புடன் நெடுந்தூரம் நடந்து கொண்டிருந்தார். அவரைத் தாண்டி சென்ற வண்டியை ஒருவன் ஓட்ட மற்றொருவன் படுத்திருந்தான். தம்மை ஏற்றிச் செல்லக் கேட்ட புனிதரிடம் வண்டி ஓட்டி பிணத்தை எடுத்துச் செல்வதாக பொய் கூறிவிட்டுச் சென்றான். "**அப்படியே ஆகட்டும்**" என்று கூறி புனிதர் தம் நடையைத் தொடர்ந்தார். வீடு சேர்ந்த வண்டி ஓட்டி படுத்திருந்த தம்மகன் உண்மையிலேயே மரித்துக் கிடப்பதைக் கண்டு பதறிப்போய் புனிதரிடம் விரைந்து மன்னிக்க மன்றாடினான் புனிதரும் அவன் இல்லம் சென்று பிணத்தை உயிருடன் எழுப்பினார்.

ஒருமுறை திருத்தந்தை 9ஆம் கிரகோரியார் உரோமையில் புனிதரின் மறையுரையைக் கேட்க நேர்ந்தது. புனிதரின் மறைநூல் ஞானத்தைக் கண்டு பெரும் வியப்படைந்து அந்தோனியாரை வேதாகமப் பேழை என்று அழைத்தார். உடல் வலிமையிழந்து குழந்தை இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்ட மன வலிமையோடு புனிதர் 1231ஆம் ஆண்டு யூன் மாதம் 13ஆம் திகதி அன்று தமது 36வது வயதில் இறுதி அருட்சாதனங்கள் பெற்று இறைவனிடம் சென்றார். இறந்து ஒரே வருடத்தில் திருத்தந்தை இவருக்கு புனிதர் பட்டமளித்து "O Doctor Optime" என்ற இசைவுடன் பாடி அஞ்சலி செலுத்தினார். திருத்தந்தையின் தீர்க்கதரிசனம் நிறைவேறும் வண்ணம் 1946இல் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் புனிதருக்கு மறைநூல் வல்லுனர் என்று பட்டமளித்து பெருமைப்படுத்தினார்.

பதுவை விசுவாசிகளின் புனிதரின் நினைவாக பெரிய ஆலயம் எழுப்பினர். 1263இல் புனிதரின் உடல் உள்ள பெட்டி திறக்கப்பட்டது. 32 ஆண்டுகள் கழித்து திறக்கப்பட்ட பெட்டியில் புனிதரின் நா புத்தம் புதியது போல் சிவப்பு வண்ணத்தில் அழகாக தோற்றமளித்தது. இந்த அற்புதத்தால் புனித பொனவத்தூதர் பாசத்துடன் சட்டென்று அந்தோனியார் நாவை கையிலெடுத்து முத்திட்டு "**தேவனை எப்போதும் புகழ்ந்து கொண்டு மற்றவரும் போற்றச் செய்த ஓ ஆசீர்வதிக்கப்பட்ட நாவே இறைவன் முன் உமக்கு எவ்வளவு பெரிய சிறப்பு உள்ளது என்பது இப்போது தெளிவாகிறது.**" என்று பரவசத்தோடு பாராட்டினார். கடந்த வருடம் புனித அந்தோனியாரின் இதயப் பகுதி வணக்கத்திற்காக எமது நாட்டின் பல பாகங்களுக்கும் கொண்டுவரப்பட்டது யாவரும் அறிந்ததே.

**போர்த்துக்கல் நாட்டில் உள்ள லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி இவர் பிறந்தார். இவரது திருமுழுக்குப் பெயர் பெர்டினாண்ட். பிரபுக்கள் வம்சத்தில் தோன்றிய இவர் சிறுவயது முதல் ஏழைகள் மீது பரிவிரக்கம் கொண்டு தம் அன்னையிடம் மன்றாடி ஏராளமான ரொட்டிகளை பெற்று தினமும் ஏழைகளுக்கு உணவளித்து மகிழ்வார்.**

2010 - 2020
ஞான ஒளி
GNANA OLI

# இயேசுவின் திரு உடல்! திரு இரத்தம்!

## வாழ்வு தரும் உணவு! பிறருடைய வாழ்வுக்கான பகிர்வு!

திருவிருந்து



நற்கருணைப் பலி என்ற அம்சத்தை அவர் வலியுறுத்த விரும்பியிருந்தால் பழைய ஏற்பாட்டுக்கால ஆடு, மாடு, கோழி வெட்டிப் பலி கொடுக்கும் சடங்குகளைத் தொடரச் சொல்லியிருப்பார். அப்படிச் செய்யாமல், சீடாக்ளைப் பந்தி விருந்தில் அமரச் சொல்லி, அதில்தான் நற்கருணையை இயேசு ஏற்படுத்தினார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்து, தொடக்கக் காலத் திருச்சபைவரை, விருந்தின் பின்னணியால்தான் கடவுளுக்கும் அவரது மக்களுக்குமிடையே உடன்படிக்கைகள் நடந்துள்ளன. இரத்தத்தை தெளித்து விட்டு, இஸ்ரயேலில் மூத்தவர்கள், மோசையோடு சேர்ந்து ஆண்டவரின் மலைக்குச் சென்று, ஆண்டவரின் முன்னிலையில் உணவைப் பகிர்ந்து உண்டார்கள். (வி.ப. 23:) என்று விடுதலைப் பயண நூலில் வாசிக்கிறோம். இவ்வாறு கடவுளோடும் தமக்குள்ளும் தங்கள் ஐக்கியத்தை வெளிப்படுத்திக் கொண்டார்கள். ஒவ்வொரு ஆண்டும் எகிப்திலிருந்து விடுதலை அடைந்த பின் அந்நிகழ்ச்சியை நன்றியோடு நினைவு கூறவே பாஸ்கா உணவும் அருந்தினார்கள். விருந்தின் பின்னணியில் நற்கருணையை இயேசு ஏன் ஏற்படுத்தினார்? என்பது நம்முன் உள்ள கேள்வி ஆகும்.

விருந்தில் நட்பு ஆழப்படுகிறது என்பது ஒரு காரணம். உங்களை என் ஊழியர்கள் என்றல்ல, நண்பர்கள் என்றே அழைக்கிறேன் என்றார். நற்கருணை ஏற்படுத்தும்போது, நட்புதான் பிறருக்கு நாம் கொடுக்கக் கூடியதும், அவர்களிடமிருந்து பெறக்கூடியதுமான சிறந்த கொடையாகும். பொதுக் குறிக்கோள், பொது ஈடுபாடு முதலியன நம்மை ஒன்றிணைப்பதைவிட நட்புதான் ஆழமாக இணைக்கிறது. விருந்தில் உணவைப் பகிர்ந்து கொள்ளும்போது, இழந்துபோன ஊட்டச் சத்துக்களை திரும்பப் பெறுகிறோம் என்பது முக்கியமல்ல, விருந்தில் நட்பைப் பகிர்ந்து கொள்கிறோம் என்பதே முக்கியம். வீட்டுக்கு அழைக்கப்பட்ட விருந்தாளிகளுக்கு, பொதுவாக, வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களை பரிமாறுவதற்கு காரணம், விருந்துக்கு வந்தவர்களோடு குடும்பப் பாசத்தை வளர்த்துக் கொள்வதற்காகத்தான். ஒருவர் அழைப்பை ஏற்று அவர் வீட்டில் விருந்து உண்பவர் அக்குடும்பத்தில் ஒருவராகிறார். விருந்துக்குப் பிறகு அக்குடும்பத்துக்கு எதிராகச் செயல்படுவது பெரிய துரோகமாகக் கருதப்படுகிறது. ஆகவே, நற்கருணை பந்தியில் பங்குகொள்வோரிடையே நட்பு ஆழப்பட வேண்டும் என்பதை எதிர்பார்த்துதான் இயேசு விருந்தின் பின்னணியில் நற்கருணையை ஏற்படுத்தினார்.

எனவே மனதில் பகை, பொறாமை, பழிவாங்கும் உணர்வு, மன்னிக்காமை. குரோதம் கொண்டிருப்போர் நட்புக்காகத் தரப்பட்ட நற்கருணை விருந்தில் எப்படி பங்கேற்கலாம்?

நற்கருணை அருந்துவோரிடையே அன்றாட வாழ்வில் பகிர்தல் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவது விருந்தின் பின்னணியில் இயேசு நற்கருணையை ஏற்படுத்தியதற்கு மற்றொரு காரணமாகும். விருந்தில் அமரும் ஒருவர் தனக்கென்று எல்லாவற்றையும் எடுத்து உண்பதில்லை. இதனால்தான் தொடக்கத்திருச்சபையில் தனிச் சொத்து இல்லாமல் எல்லாம் அனைவருக்கும்உரிய பொதுச் சொத்தாக இருந்தது....

> வீட்டுக்கு அழைக்கப்படட விருந்தாளிகளுக்கு, பொதுவாக, வீட்டிலேயே தயாரிக்கப்படட உணவுப் பண்டங்களை பரிமாறுவதற்கு காரணம், விருந்துக்கு வந்தவர்களோடு குடும்பப் பாசத்தை வளர்த்துக் கொள்வதற்காகத்தான். ஒருவர் அழைப்பை ஏற்று அவர் வீட்டில் விருந்து உண்பவர் அக்குடும்பத்தில் ஒருவராகிறார்!

# துன்பங்களிலிருந்து விடுதலை!

## நல்ல ஞானிகளுடன் தொடர்பு ஏற்பட்டால் சொந்தம், பந்தம், மயக்கம் விலகிவிடும்!




**அது விலகினால், காசு பணத்தின் ஆசை விலகிவிடும், அந்த ஆசை விலகிவிட்டால் மனதுக்கு நிம்மதி வந்துவிடும், அந்த நிம்மதி வந்துவிட்டால் ஆன்மா சாந்தியடையும். நல்ல சகவாசத்தில் எவ்வளவு பெரிய வாழ்க்கை அடங்கிக் கிடக்கிறது!**

கட்டுப்பாடற்ற வாழ்க்கை நடத்தும் நண்பர்களோடு சேர்ந்து விட்டாலோ '**இதல்லவோ வாழ்க்கை**' என்று தோன்றுகிறது.

எதைச் சார்ந்து நிற்கிறோமோ, அதன் வடிவத்தை அடைந்து விடுகிறோம்.

'**தீயவர்**' என்றால் தீயைப் போன்றவர் என்று அர்த்தம்

அதற்கு எதிர்மறை என்ன?

'**நல்லவர்**' என்பார்கள்; அது தவறு.

தீயைப் போன்றவர் என்பதற்கு எதிர்மறை தண்ணீரைப் போன்றவர் என்பதாகும்.

அதை '**நீ ரவர்**' என்றான் வள்ளுவன்
**தீ சுடும்: தண்ணீர் குளிரும்.**

குளிர்ச்சியான உறவுகளே! குதூகலமான உறவுகள்!

தனிமை கண்டதுண்டு; அதிலே சாரம் இருக்குதேம்மா! என்றான் பாரதி.

பரபரப்பான நகர, நாகரீகத்தில் தனிமை எங்கே நமக்குக் கிடைக்கிறது.

கிராமத்து நண்பர்கள் மேல் எனக்கொரு பொறாமை உண்டு. ஒவ்வொரு கிராமத்தைப் பார்க்கும்போதும், '**நமது வாழ்க்கை இங்கேயே அமைந்திருக்கக் கூடாதா? என்றே நான் ஏங்குகிறேன்.**

குளு குளுவென்று காற்றடிக்கும் ஆற்றங்கரையையும், கரையில் இருக்கும் மரங்களையும், பச்சைப் புல்வெளியையும், பறந்து செல்லும் பறவைகளையும், துள்ளியோடும் கன்றுக்குட்டிகளையும், தொடர்ந்து செல்லும் பசுக்களையும்,ஆயர் மகளீரின் வளைகுழுங்கும் கைகளையும், களை எடுப்போரின் கலகலப்பையும், வைக்கோற் கட்டைத் தலையில் சுமந்து வரப்பிலே போகும் விவசாயிகளையும், அழகான கிராமத்து கோவில்களையும் பார்க்கப்பார்க்க மனது என்ன பரவசப்படுகிறது! எனது துன்பங்கள் அதிலே மறைகின்றன.

துன்பத்தை மனத்திலேயே வைத்திருப்பவன் எங்கே போனாலும் துன்பம் தான். தனிமையாக உட்கார்ந்து சுகமாக சிந்தித்தால் அகக் கவலை, புறக்கவலை இருக்காது. தனியாக உட்கார்ந்து சிந்தித்துப் பார் கற்பனை புறாவைப் பறக்க விடு.

பயத்தினால் புலன்கள் மென்மையாகி விடுகின்றன. தைரியத்தினால் தான் அவை கனமடைகின்றன.

தைரியத்தை வளர்ப்பதற்குத் தனிமையைப் போல் சிறந்த சாதனம் வேறெதுவும் இல்லை.

அதிலும் பசுமை நிறைந்த காடுகளில் நடந்து சென்றால் ஒரு உற்சாகமும், தைரியமும் வரும். அதனால்தான் ஞானிகள் தங்கள் வாழ்க்கைக்குக் காடுகளைத் தேர்ந்தெடுத்தார்கள். கட்டுப்பாடற்ற சிட்டுக் குருவிகள்; மரமேறித்தாவும் குரங்குகள்; துள்ளித்திரியும் மான் குட்டிகள் - இவற்றைக் காணும் போது உள்ளம் எவ்வளவு உற்சாகமடைகிறது! பரபரப்பான் வாழ்க்கையில் இந்த நிம்மதி ஏது? காடுகளில் திரியும் கொடிய திருடர்களிடம் கூடக் கருணையும் அன்பும் இருக்கும். காரணம், அது காடு வளர்த்த மனோதத்துவம், தற்கொலை செய்து கொள்ள விரும்புகிறவன் கூட காட்டுக்குப் போனால் அந்த எண்ணத்தை விட்டு விடுகிறான்.

இந்த வாழ்க்கையில் கசப்பையே இனிப்பாக்கிக்கொள்ளுங்கள்; இருட்டறையே வெளிச்சமாக்கிக் கொள்ளுங்கள்; நஷ்டத்தையே இலாபமாக்கிக் கொள்ளுங்கள், எது நேர்ந்தாலும் கவலைப்படாதீர்கள்.

எந்த செய்தியையும் அமைதியாகக் கேளுங்கள்; உடம்பை அலட்டிக்கொள்ளாதீர்கள்.

மனம் அங்கும் இங்கும் அலையும்போது மூளையும் உடலும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. ஆழ்ந்த தியானத்தில், அலைபாயும் நினைவுகள் அடைப்பட்டு போகின்றன. கொடிய காற்று உங்கள் நாசியில் புகுந்தாலும் உடம்பில் அள்ளிக்கொட்டினாலும் அது உங்களை சுடாது. ஐந்து புலன்களும் செயலற்று நிற்கும்: மனம் ஒரே சமநோக்கில் இருக்கும். அந்த தியான யோகம் உங்களின் நீங்காத கவனத்துக்கு உரியது.

இந்த வாழ்க்கையில் கசப்பையே இனிப்பாக்கிக் கொள்ளுங்கள்; இருட்டையே வெளிச்சமாக்கிக் கொள்ளுங்கள்; எது நேர்ந்தாலும் கவலைப்படாதீர்கள். அத்தனையையும் இறைவனிடம் ஒப்படையுங்கள்.

யாராவது உங்களை அவமானப்படுத்தினால், அது ஒரு அநுபவம் சேகரிக்கப்பட்டு விட்டதென்று கருதுங்கள். எந்தச் செய்தியையும் அமைதியாகக் கேளுங்கள்; உடம்பை அலட்டிக்கொர்ளாதீர்கள். துன்பங்களை துன்பமாக பார்க்காமல் ஒரு அநுபவமாக நோக்குவோம். வாழ்வில் வெற்றி பெறுவோம். வாழ்க வளமுடன்.

**அருட் சகோ. மாகிரட் ஜெபமாலை** R.G.S

2010 - 2020 ஞான ஒளி

## 08 திவ்விய நற்கருணை...

அனைத்து அருட்பணியாளர்களும் தவறாது தங்கள் தனிப்பட்ட திருப்பலியை தினமும் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

**2. நற்கருணையை வழங்கும்போது கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும்.**

1. மேலும் கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்ளும்சாதாரண முறையானது, பலிப்பீடத்தின் (கிராதி) முன்னால் முழங்கால் படியிட்டு திவ்விய நற்கருணையை நாவில் பெற்றுக்கொள்வதாகும். இந்த முறையை தொடர்ந்து பின்பற்ற நாங்கள் அனைத்து விசுவாசிகளையும் ஊக்குவிக்கின்றோம்.

2.மேலும் தனக்கு கொரோன தொற்று நோய் தொற்றலாம் எனும் அச்சம் எவருக்காவது இருப்பின் அவர் திவ்விய நற்கருணையை தனது கரங்களில் வழங்குமாறு கேட்டுக்கொண்டால் அவ்வாறு வழங்க அனுமதி உண்டு. அந்த அனுமதி வழங்கப்படுவது கொவிட் -19 தொற்று நோய் நாட்டில் இருந்து இல்லாமல் போகும்வரை மட்டுமேயாகும்.

3. திவ்விய நற்கருணையை தமது கரங்களில் பெறுபவர்களும் பலிப்பீடத்தின் (கிராதி) முன்னால் முழங்காற்படியிட்டு திவ்விய நற்கருணையை பெறவேண்டிய முறையாவது.

வலது உள்ளங்கையில் இடது கையை வைத்து இடது கையை மரியாதையோடு அருட்பணியாளரை நோக்கி நீட்டவும். திவ்விய நற்கருணையை வழங்கும் அருட்பணியாளர் உங்கள் இடது கையில் திவ்விய நற்கருணையை வழங்கிய பின்னர் உங்கள் வலது கையால் திரு அப்பத்தை எடுத்து அவ்விடத்திலேயே நாவில் வைத்து மிகுந்த பக்தி மரியாதையோடு திவ்விய நற்கருணையை உட்கொள்ளுங்கள். எந்தவொரு காரணத்திற்காகவும் நம்பிக்கையாளருக்கு வழங்கப்பட்ட திரு அப்பத்தை அருட்பணியாளரின் முன்னிலையில் உட்கொள்ளாமல் அதனை வேறு இடத்திற்கு கொண்டுசெல்ல முயற்சி செய்யக்கூடாது. மேலும் கையில் பெற்றுக் கொள்ளும் அப்பத்தில் இருந்து கையில் மிகுதியாகும் திரு அப்பத்துண்டுகள் அனைத்தையும் உட்கொள்ள வேண்டும். அதை பற்றி திவ்விய நற்கருணையை உட்கொள்ளும் நபர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

திவ்விய நற்கருணையை கரங்களில் பெற்றுக்கொள்ளும் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டால் அவர்களை திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்ள பலிப்பீடத்தின் (கிராதி) ஒரு பக்கத்திற்கு அவர்களை அழைத்து, அவர்களுக்கு திவ்விய நற்கருணையை வழங்க அனுமதியுள்ள ஒருவரை பயன்படுத்தப்படலாம். எவ்வாறாகிலும் நாவில் அல்லது கையில் திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்ளும்போது வழமைப்போல் வரிசையாக செல்ல அனுமதி இல்லை. திவ்விய நற்கருணையை பெற வருபவர்கள் அனைவரும் போதிய இடைவெளியை பேணி கிராதியின் அருகில் வந்து முழங்காற்படியிட்டு திவ்விய நற்கருணையை நாவில் அல்லது கையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. உடல் சுகயீனம் காரணமாக முழங்காற்படியிட இயலாதவர் பலிப்பீடத்தின் (கிராதி) அருகில் நின்றுக்கொண்டு திவ்விய நற்கருணையை கரங்களில் அல்லது நாவில் பெற்றுக்கொள்ளலாம். 17 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளின் கரங்களில் திவ்விய நற்கருணை வழங்கப்படக்கூடாது.

5. கோவிட் -19 தொற்று நோயை வெற்றிக் கொண்ட பின்பு கொழும்பு மறைமாவட்டத்தில் திவ்விய நற்கருணையை நாவில் பெற்றுக் கொள்ளும் முறை மீண்டும் செயற்படுத்தப்படும். அக்காலம் மீண்டும் உதயமாகும்போது பேராயர் அவர்கள் மீண்டும் ஒரு அறிவிப்பை வெளியிடுவார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்ற காலப்பகுதியில் திருவழிபாட்டின் புதுப்பித்தல்பற்றி மிகுந்த ஆர்வத்துடன் பேசப்பட்டபோது, சிலர் திவ்விய நற்கருணை வழங்கப்படுவது அதை நோக்கி பார்த்துக் கொண்டு இருப்பதற்காகவோ அல்லது வணக்கம் செலுத்துவதற்காகவோ அல்ல அதனை உட்கொள்வதற்காகவே என்றுக் கூறினார்கள். இதை குறித்து திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் தமது "Sacramentum Caritatis" எனும் அப்போஸ்தலிக்க சுற்று மடலில், 66ஆம் பிரிவில் "தவறான முரண்பாடுகள்" என குறிப்பிட்டுள்ளார் "எவரும் இந்த திரு உடலுக்கு முதலில் ஆராதனை செலுத்தாமல் அதை உட்கொள்ளுவது தகுதியானது அல்ல" (Enarrationes in Psalmos 98 : 9, CCl XXXIX 1385 ) என ஹிப்போ நகர் தூய அகுஸ்தினார் கூறியுள்ளார்.

திவ்விய நற்கருணை வழியாக எம் மத்தியில் வருகின்றவர் வேறு யாரும் அல்ல இறைமகனே ஆவார். "எனவே திவ்விய நற்கருணையைப் பெற்றுக்கொள்வது என்பது அவருக்கு ஆராதனை செலுத்துவதாகும்". (Sacramentum Caritatis 66) இதனூடாகப் பொருள்படுவது என்னவென்றால் ஆண்டவரை நாம் மிகுந்த பக்தியோடும் மரியாதையோடும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

தங்களது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை வணங்கி மரியாதை செலுத்தும் தேசிய பண்பாட்டில் வாழ்கின்ற இலங்கையர்களாகிய எமக்கு, எங்களுக்காக பணிந்து எங்களோடு இணைய எமது தேடி வருகின்ற திவ்விய நற்கருணை ஆண்டவருக்கு எந்த அளவிற்கு நாம் ஆராதனை செலுத்த வேண்டும் என சிந்தித்து பார்ப்பது மிக சிறந்ததாகும். பலவீனமான மனிதர்களாகிய எம்மீது இறைவன் வைத்துள்ள அளவற்ற அன்பினால் இறைவன் எமக்கு தந்தருளிய அவருடைய திரு உடலானது வெறுமனே உண்பதற்காக வழங்கப்படும் உணவு அல்ல. எனவே இந்த விடயங்களை கருத்திற்கொண்டு நாம் திவ்விய நற்கருணை ஆண்டவருக்கு பக்தியாய் ஆராதனை செலுத்தும் மன நிலையை ஏற்படுத்திக்கொள்வது மிக முக்கியமானதாகும்.

எனவே, எனது அன்பான சகோதர சகோதரிகளே, திவ்விய நற்கருணைமீது மிகுந்த பக்தி பற்றுதலோடு ஆன்மீக ஆசீருடன் அன்போடு நேர்த்தியான முறையில் அவரை பெற்றுக்கொள்ள நல்ல ஒப்புரவு அருளடையாளத்தை பெற்று திவ்விய நற்கருணையை உட்கொள்ள தயாராகுங்கள். திவ்விய நற்கருணை எனும் இயேசுவில் வலிமை பெற்று எமது பாவங்கள் மற்றும் துன்ப வேதனைகளில் இருந்து எம்மை நற்சுகத்தை நோக்கி நடத்திச் செல்வாராக! திவ்விய நற்கருணையில் உயிருடன் வீற்றிருக்கும் ஆண்டவர் இயேசு உங்களை பாதுகாப்பாராக!


**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்**
**2020 மே மாதம் 10ம் திகதி**

## 03 கொரோனா....

மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை சித்திரை மாதம் 3ம் திகதி நேரடி ஒளிபரப்புச் செய்யும் விசேட சிறப்பு செபவழிபாட்டை நடாத்தி அதன் முடிவில் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் எம் நாட்டை எவ்வித அழிவும் ஏற்படாமல் காப்பாற்றிய லங்கா மாதாவிடம் இக்கொடிய கொவிட் - 19 கொரோனா வைரசில் இருந்து எம் மக்களைக் காப்பாற்றி தருமாறு இறைதந்தையிடம் பரிந்துரைக்குமாறு வேண்டி உறுதிமொழி எடுத்தார். இச்சிறப்பு வழிபாடு தேவத்தை லங்கா மாதா பசிலிக்காவில் காலை 11.00 மணிக்கு இடம்பெற்றது. அவ்வேளை பேராயர் அனைத்து இறைமக்களிடமும் உங்கள் ஆலயமணி காலை 11.00 மணிக்கு ஒலிக்கும் பொழுது அனைவரும் என்னோடு ஒன்றிணைந்து மௌனமாகச் செபியுங்கள் என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

**உரோமாபுரியில் :**

உரோமையில் கொத்துக் கொத்தாக மரித்துக் கொண்டிருக்கும் மக்களுக்காகவும், கொரோனா வைரசினால் தாக்கம் அடைந்து கொண்டிருக்கும் உலக மக்களுக்காகவும் சிறப்பு விசேட ஆசீர்வாதம் (URBI ET ORBI BLESSING) ஒன்றைக் கடந்த பங்குனி மாதம் 27ம் திகதி வெள்ளிக்கிழமை, தூய பேதுரு சதுக்கத்தில் இடம்பெற்ற திவ்விய நற்கருணை நாதரின் எழுந்தேற்றத்தின் பின் வழங்கினார். சாதாரணமாக மிகவும் சிறப்பாகவும் மக்கள் கூட்டத்துடனும் இவ்விடத்தில் நத்தார் தினத்திலும், உயிர்த்த ஞாயிறு தினத்திலுமே வழிபாடு இடம்பெறுவதுண்டு. ஆனால் இத்தினத்தில் கொட்டும் மழையின் மத்தியில் திருத்தந்தை தனிமையில் சோகம் நிறைந்த முகத்தோடு இவ் ஆசீர்வாதத்தை வழங்கியது உலக மக்கள் எல்லோரையும் சோகத்தில் ஆழ்த்தியது. அவ்வேளையில் ஏன் நீங்கள் பயப்படுகின்றீர்கள்? உங்களுக்கு விசுவாசம் இல்லையா? என்ற இறைவார்த்தைப் பகுதிகளை விளக்கிச் செய்தியை வழங்கினார். இதற்கு மாற்கு 4:35-41 பகுதிகளை எடுத்துக் கொண்டார். சீடர்களோடு இயேசு படகிலே பயணிக்கும்போது கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு படகு தாழப்போகும் நிலை ஏற்பட்டது. ஆனாலும் இயேசு படகின் ஒரு பகுதியில் தூங்கிக் கொண்டிருந்தார். எனவே படகிலே பயணித்த சீடர்கள் பயந்து நடுங்கினர். கொரோனா ஏற்பட்டு பல வாரங்களின் பின் நாமும் இதே படகிலே பயணிப்பவர்கள் போல் இருக்கின்றோம் என்று திருத்தந்தை விளக்கிக் கூறினார்.



## மணமகள் தேவை

நீர்கொழும்பை வசிப்பிடமாக்க கொண்ட கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 30 வயது 5அடி, 11 அங்குலம் லேத்மெசின் இயத்திரத்தில் தொழில்புரியும், இப்போது சவுதியில் வேலை பார்க்கும் மகனுக்கு மணமகள் தேவை

**தொடர்புகளுக்கு : 0715618953, 0769154636**

(65850)

## 02 2020 சித்திரை...

தெரிவித்துக்கொள்கிறேன். மதம், இனம் பாராது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பலவழிகளில் உதவியும், நிதியுதவி புரிந்த அனைத்து நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும், எமது நன்றிகள். (நிதியுதவி தொகை மில்லியன் ரூபா ஐநூற்றி பதினாறு ஆகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு மில்லியன் ரூபா முன்நூற்றி எழுபத்தியிரண்டு செலவிடப்பட்டுள்ளது. மிகுதியாக உள்ளது மில்லியன் நூற்றி நாற்பத்தியாறு. இதைப்பற்றிய மேலதிக விரங்களை பொரளை ஆயர் இல்லத்தின் 'செத் சரண' நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்). கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயம், கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றுக்கான நிர்மாண பணிகளுக்கு உதவி புரிந்த வீட்டு அதிகார சபைக்கும் அரச நிறுவனங்களுக்கும், தற்போதைய எதிர்கட்சி தலைவர் ஆகியோருக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கிறேன்.

நடைபெற்ற அசாதாரண நிகழ்வின் மூலம் நாம் முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொண்டோம். அதாவது, ஏதேனும் ஆபத்துக்கள் விபரீதங்கள் ஏற்படும் பட்சத்தில் பிரிவினை வாதத்தினை தூண்டாமல், இனம் மதம், மொழி பாராது இணைந்திருந்து செயல்பட வேண்டும் என்பதேயாகும்.

இந்நாடு பௌத்த சித்தாந்தத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதை நாம் ஏற்ற, இந்து, முஸ்லிம், கிறிஸ்தம் என அனைவரும் இணை-ந்து சகோதரத்தன்மையுடன் இந்நாட்டை முன்னேற்ற பாதையில் இட்டு, 30 வருட யுத்தத்தைப் போன்று மீண்டுமொரு யுத்தத்திற்கு இடமளியாது, புதிய இலங்கையை கட்டியெழுப்ப நாம் கைகோர்த்து முன்னேறுவோம்.

**உங்களனைவருக்கு நன்றி! இயேசு துணை!**

## 12 போதகரே...

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, பேதுருவின் கற்பாறைப்போன்ற விசுவாசத்தை பறைசாற்றும் இவ்விடத்திலிருந்து விடியக்காலத்தில் நட்சத்திரமும் வியாதிக்காரர்களின் ஆரோக்கியமுமான எம் அன்னையின் பரிந்துரை மூலம் உங்கள் அனைவரையும் எம் ஆண்டவரிடம் ஒப்படைக்கின்றேன். உரோமையும் உலகையும் தழுவி நிற்கின்ற இத்தூண்மண்டபத்திலிருந்து கடவுளின் ஆசீர் ஆறுதலின் அரவணைப்பாக உங்கள் மீது இறங்குவதாக. ஆண்டவரே, உலகை ஆசீர்வதியும். உடலுக்கு நற்சுகத்தையும் உள்ளத்திற்கு ஆறுதலையும் அளித்தருளும். நீர் எம்மை அஞ்சாதிருக்கும்படி அழைக்கின்றீர். ஆனால் ஆண்டவரே எமது விசுவாசம் பலவீனப்பட்டுள்ளது. நாம் பயத்தோடு வாழ்கிறோம். ஆண்டவரே எம்மை இப்பேரலைகளுக்கு மத்தியில் கைவிட்டு விடாதேயும். 'நீங்கள் அஞ்சாதீர்கள்" என்று மீண்டும் எம்மிடம் கூறும் ஆண்டவரே! நாங்கள் பேதுருவுடன் இணைந்து எங்கள் கவலைகளையெல்லாம் உம்மிடம் விட்டுவிடுகின்றோம். ஏனெனில் நீர் எம்மேல் அக்கறை கொண்டுள்ளீர்.

## 10 விவிலிய வினா விடை

208. மறைநூல் (11:17)
209. பேதுரு (11:21)
210. மன்னித்து விட வேண்டும் (11:25)
211. தலைமைக்குருக்கள், மறைநூல் அறிஞர்கள் மூப்பர்கள் (11:27-28)
212. யோவான் (11:31-32)
213. திராட்சைப் பழங்களை மிதித்து சாறு பழிவதற்கான பாறை பகுதியில் வெட்டப்பட்ட குழி (12:11)
214. கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டிடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று' (12:10)
215. ஏரோதியர் சிலரை (12:13)
216. ஒருநாள் கூலிக்கு இணையான வெள்ளி நாணயம் (12:15 அடிக்குறிப்பு)
217. சீசருடையது (12:16)



# நன்றி நவிலல்

## முன்னாள் பேராயர் அதி வந்தனைக்குரிய கலாநிதி
## நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ

இயேசு அவரிடம், ஈஉயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்:. – யோவான் 11:25

**நித்திய இளைப்பாறல் – 2020 ஏப்ரல் 10**

இரங்கல் செய்தி, செபம் மற்றும் ஆசீர்வாதங்களுக்கூடாக எம்மோடு ஒன்றிணைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ், அதிமேதகு கர்தினால் மற்றும் கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் பேராயர் அதி வந்தனைக்குரிய ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை, ஏனைய அனைத்து ஆயர்கள், தக்ஷின லங்கா ரமண மஹா நிகாய பிரதம பீடாதிபதி வந்தனைக்குரிய ஓமல்பே சோபித தேரர் மற்றும் வணக்கத்திற்குரிய மகா சங்கத்தினர், அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர், பெரியதொரு பங்குதந்தை மற்றும் உதவிப் பங்குதந்தை, அனைத்து குருக்கள் மற்றும் கன்னியர்கள், உறவினர்கள், நண்பர்கள், பல்வேறு நிறுவனங்களையும் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள், தேவத்தை ‘எம்மாவுஸ்’ இல் பணியாற்றிய மூன்று பராமரிப்பாளர்கள், நீர்கொழும்பு தூய.மரியாள் கல்லூரியின் அதிபர் மற்றும் மாணவர்கள், தூய. மரியாள் பங்கு இளைஞர் சங்கம் மற்றும் பாடகர் குழுவினர், அமைச்சர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிறிஸ்தவ விவகார அமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர்கள், SLRC தலைவர், இயக்குனர்கள் மற்றும் ஊழியர்கள் Verbum TV தலைவர், இயக்குனர்கள் மற்றும் ஊழியர்கள், செத் FM, பாதுகாப்பு படையினர், பொலிஸ் திணைக்களம், தனிமைப்படுத்துதல் குழுக்கள் நீர்கொழும்பு மாநகர சபையின் மேயர் மற்றும் ஊழியர்கள், Industrial Building System தின் ஊழியர்கள் மேலும் இறுதி கிரியைகளில் பங்குபற்றியவர்கள், இரங்கல் செய்திகள் மற்றும் மலர்களை அனுப்பி வைத்தவர்கள், செபம் மற்றும் நேரடியாக எங்கள் துக்ககரமான வேளையில் பங்குபற்றி பல்வேறு வழிகளிலும் எங்களுக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் நன்றிகளை தெரிவிக்க இயலாதுள்ள நிலைக்காக வருந்துகின்றோம்.

***நித்திய இளைப்பாறுதலை அவருக்கு அளித்தருளும், ஆண்டவரே!***

*சகோதர, சகோதரிகள், பெறா மக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்.*

(66518)


# உமக்கே எமது சமர்ப்பணம்!

கோவிட் 19க்கும் மத்தியில் மறைமாவட்டம், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவற, பொதுநிலையினர்களின் பலத்த வேண்டுகோளுக்கிணங்க உங்கள் கைகளில் தவழும்

ஞான ஒளி
ඥාන ඕලි
GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

வீட்டுக்கு வீடு கொண்டுசெல்லும் கிறிஸ்தவ மறைத்தூதுப் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் பங்குத் தந்தையே!

**உமக்கே எமது சமர்ப்பணம்!**

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

CMYK

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்



## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த ப்ரதீபய மாவத்தை கொழும்பு – 08.

தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586

E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்